திராவிடநாடு

18—12—60 | வார வெளியீடு | விலை 16 காசு

சாவே, நீ எட்டி நில்லாய்!

[எழிலரசன்]

எல்லோரும் ஒன்றென்னும் உருவினுள்ளே
எதிரிகளும் எங்களுடன் ஒட்டிக் கொண்டே
பொல்லாத திட்டமெல்லாம் போடுகின்றார்
போதுமளவு வன்னெஞ்சம் கொண்ட அன்னார்
கொல்லாமல் கொல்லுகின்ற சூழ்ச்சி தன்னை
கொன்றேநாம் புதைகுழியில் போடு மட்டும்
எல்லோரும் அஞ்சுகின்ற சாவே சற்று
எட்டிப்போ என்னுயிரைக் குடியா வண்ணம்!

என்னாட்டார் பொன்னாட்டார் தமிழ ரெல்லாம்
எங்கெங்கோ மாய்கின்றார் ஏனோ இஃது?
தன்னாட்டில் அண்டிவந்தோர் வாசம் செய்ய
தமிழன்ஏன் கடல்தாண்டிச் செல்ல வேண்டும்?
கன்னெஞ்சர் கரவுள்ளத்தார் வாழ இங்கு
வண்டமிழன் வாழ்விழந்து வதைவ தேனோ?
சின்னேரம் பொறுத்திருப்பாய் சாவே சற்று,
சீர்கேட்டைக் களைந்தெறியும் நேரம் மட்டும்!

அந்திக்கலம்பகம்

"பொன்னி! என்ன ஒரே சிரிப்புமயம்? எப்போது பார்த்தாலும் பெரிய சிந்தனையில் மூழ்கிக்கிடப்பவள் போல இருப்பது உன் வாடிக்கையல்லவா! ஒரு நாளும் இல்லாத திருநாள் என்பார்களே, அதைப்போல, முகம் இவ்வளவு மலர்ச்சியாக இருக்கிறதே. என்னடி விஷயம்? அடி, சொல்லேன்."

"ஏதாவது புதிதாக இருந்தால்தானே சொல்ல! என் முகம் எப்போதும்போலத்தான் இருக்கிறது; புதிதாக என்ன கண்டுவிட்டீர்கள் என் முகத்தில்...?"

"அப்படிக் கேட்டால், என்னன்னு பதில் சொல்றது. என்னமோடிம்மா, ஏதோ பெரிய இரகசியம்னு, சொல்ல வேண்டாம்; உன் மனதோடு போட்டுவைத்துக்கொள்."

"ஒரு இரகசியமும் இல்லை, ஏன் வீணாகக் கற்பனை செய்து கொள்கிறீர்கள்"

"நான் துளியும் நம்பமாட்டேன்"

"அது கிடக்கட்டும்—வக்கீல் வரவில்லையா, இங்கே."

"இல்லையே......என்ன பொன்னி! அவளோட பேச்சை எடுத்ததும், முகம், மத்தாப்புபோல ஆகறது..."

"மத்தாப்புபோல என்று சொன்னீர்களே, அது ஒரு வகையிலே பொருத்தம்; ஏன் தெரியுமா? மத்தாப்பு கொளுத்தினதும், அழகான வெளிச்சம் தெரியும்......அணைந்துவிட்டதும் பார்த்தா ஒரே கருப்புஆக மாறிவிடும்..."

"இதை, நீ சொல்லித்தான் நான் தெரிந்துகொள்ளணுமா..."

"நான்சொல்றது, நீங்க தெரிந்துகொள்ள அல்லவே! எனக்குத் தெரிந்திருக்குது என்பதைக்காட்ட. அப்படி வைத்துக்கொள்ளுங்களேன்"

★ **சி. என். ஏ.** ★

"மத்தாப்பு, எரியும்போது பளபளபா இருப்பதும், அணைந்த பிறகு கரியாகிப்போவதும் இப்ப, நீ, சொல்லவேண்டிய காரணம்?"

"என் முகம், மத்தாப்புப்போல இருப்பதாகச் சொன்னீர்களே, உடனே எனக்கும் மத்தாப்புப்பற்றிய கவனம் வந்துவிட்டது; போங்களேன்."

"பொன்னி! வரவர, நீ போக்கிரியாகிண்டு வர்றே... சுத்திவளைச்சிப் பேசுவது போதும்... உண்மையைச் சொல்லு. பட்டுவோட பேச்சை எடுத்த உடனே, உன் முகம், செந்தாமரையாகக் காட்சி தந்தது என்பார்களே, அதுபோல இருக்க, என்ன காரணம்?"

"உங்களுக்குத் தெரியவில்லையா? அன்று, என் தம்பியைக் கடைவீதியிலே அடிக்கவந்தார்களே சிலபேர், நாமெல்லாம் ஓடினோமே..."

"ஆமாம், ஓடினோம், கூச்சலைக் கிளப்பினோம், கலகம், செத்த பாம்பாகி விட்டது...... அதனாலே என்ன..."

"ஓடினோமே, நம்மோடு வந்த பட்டுவை நீங்க சரியாகக் கவனிக்கவில்லையா...? கலங்கிப்போய்விட்டாளே, கவனமிருக்கிறதல்லவா... உடனே போய் மருந்து போட்டாகணும் உங்க தம்பிக்குன்னு, வற்புறுத்தினது, நினைவிருக்குதா?"

"ஆமாம்! மறந்தா போய்விடுவேன். பட்டு, பதறித்தான் போய்விட்டா".

"ஏன், பதறிப்போனா சொல்லுங்க, பார்ப்போம்".

"இதென்னடி கேள்வி. நமக்கு வேண்டியவாளுக்கு ஒரு ஆபத்து, ஒரு கஷ்டம்னா, பதறமாட்டாளோ?"

"பதறுவா...ஆனா உருகிப் போய்விடமாட்டா! இவ இருக்காளே, பட்டு, என் தம்பியைப் பார்த்ததும், அப்படியே உருகிப் போய்விட்டா......புரிகிறதா விஷயம்!"

"அப்படியா...நான் கவனிக்கவில்லை, பொன்னி!"

"என் தம்பி இருக்கிறானே, அவனும் பலே பேர்வழி. இந்தப் பூனையும் பால் சாப்பிடுமா? என்று பழமொழி சொல்வார்களே, அப்படித்தான் இருப்பான். ஆனா, அன்றைக்கு அவன், என்ன ஆனான் தெரியுமோ! பட்டு உருகறதைப் பார்த்து, அவனும், உருக ஆரம்பித்துவிட்டான்."

"பொன்னி! அப்படின்னா......"

"பட்டு, கூடிய சீக்கிரம் எங்க வீட்டுக்கு வந்துவிடுவா......"

"பலே! பலே! அப்படித் திரும்பிவிட்டதா, கதை. ஆனா, பொன்னி! பட்டு வீட்டிலே உள்ளவா, பழைய பஞ்சாங்கமாச்சே... சம்மதிப்பாளோ"

"சம்மதிக்கமாட்டா...... இதுக்கு ஆருடமா பார்க்கணும். ஆனா, பட்டு என்ன, விவரம் தெரியாதவளா? சட்டம் படித்திருக்காளே".

"சட்டம் படித்துவிட்டா தீர்ந்ததா? ஏட்டுச் சுரை கறிக்கு உதவுமா......?"

"என், தம்பி, அதையேதான் கேட்பான், பட்டுவிடம்......"

"பட்டுவிடம் கேட்பானா?"

"ஆமாம், இதே நேரத்திலே அவர்கள் இருவரும், இது விஷயமாகத்தான் பேசிக்கொண்டிருக்கணும்"

"பட்டு, உங்க வீட்டிலேயா இருக்கா? நீ இங்கே புறப்பட்டதைப் பார்க்கலியோ?"

"ஏன் பார்க்கல்லே! பார்த்தா! நானும், போகலாமா என்று கேட்டேன். நீங்க போய்விட்டு வாங்க, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்குது என்று சொல்லிவிட்டா."

"சொல்லிவிட்டு, உன் வீட்டிலே தான் இருக்காளா? பாரேண்டி, அவளோட, தைரியத்தை! எப்ப, வந்தா, அங்கே?"

"ஒவ்வொருநாளும், அங்கே தான். வக்கீலல்லவா......என் தம்பியிடம் வாக்குமூலம் வாங்க வேண்டாமோ!"

"அங்கு வந்துவிடுவாளா, பட்டு! அதனாலேதான், இந்தப் பக்கமே காணோம், அவளை"

"அடி ஒண்ணும் இல்லை, ஊமைக் காயம்தான்! பயப்படவேண்டிய தில்லேன்னு, என் தம்பி சொன்னான்; பட்டு, உடனே, ஊமைக் காயமா இராது, உள் காயமா இருக்கலாம், அதை உடனடியாகக் கவனிக்கணும், இல்லையானா பெரிய ஆபத்தாகிவிடும்னு, சொன்னா..."

"நான் கவனிக்கவில்லை பொன்னி! பட்டு அவனிடம் பேசிக்கொண்டா, இருந்தா?"

"அவனிடம் நேரிலே பேசணுமா? நான் இல்லையா, தபால்காரி! என் மூலமாகத்தான், செய்தி! என்னிடம்தான் சொன்னா, ஆனா, பார்வை, என்பக்கம் இருந்தாத்தானே"

எப்படி எப்படியெல்லாமோ!

இந்தி பேசப்படாத பகுதிகளில், இந்தி கட்டாய பாடமாகவோ, விருப்ப பாடமாகவோ கற்றுத்தரப்படும் பள்ளிக்கூடங்களில் உள்ள நூல் நிலையங்களுக்கெல்லாம் இந்திப் புத்தகங்களைக் கூடுமானவரை மலிவான விலைக்கோ, அல்லது இனாமாகவோ வழங்க டில்லி சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

இந்தியைப் பரப்புவதில் இதுவும் ஒரு வழியென்று சர்க்கார் கருதுகிறதாம்.

இன்றைய டில்லி அரசு இந்தியை எப்படி எப்படியெல்லாம் புகுத்தலாம் என்பதிலேயே கண்ணுங் கருத்துமாக உள்ளது என்பதற்கு, இந்திப் பிரசாரம்பற்றிச் சர்க்கார் அன்றாடம் பிறப்பிக்கும் உத்தரவுகளும், யோசனைகளும், முடிவுகளுமே சான்றாக உள்ளன.

ஆனால், டில்லி முதல்வரோ, சமயம் வாய்க்கும் போதெல்லாம்,

இந்தித் திணிப்புக் கூடாது என்று கூறி வருகிறார். இது எப்படி இருக்கிற தென்றால்,

"நான் அடிப்பதுபோல் பாவனை செய்கிறேன்—நீ அழுவதுபோல் பாவனை செய்" என்று சொல்வார்களே! அதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

"போடி. நீ வீணாகத்தப்பர்த்தம் செய்துகொண்டாயோ என்னமோ உன்னிடம்தானே பட்டுபேசினா..."

"இவ; வக்கீல்! ஆனா, அன்று டாக்டராயிட்டாளே!! அதற்கு என்ன பொருள்? போகட்டும் அன்றுதான், என்னமோ, மனம் கேட்கல்லே பதறிப்போனா, என்று வைத்துக்கொள்வோம். மறுநாள், என்னவேலை? வந்துவிட்டாளே, வீட்டுக்கு;எழெட்டுச் சட்டபுத்தகங்களைத் தூக்கிக்கொண்டு"

"சட்டப்புத்தகம் எதுக்கு?"

"என் தம்பி அப்படித்தான் கேட்டான். என் பேச்சை மதிக்க விருப்பமில்லை, அலட்சியப்படுத்துங்க, பரவாயில்லை; ஆனா சட்டப் புத்தகத்தை, நீங்களே பாருங்கன்னு, சொல்லி, ஆதாரங்களை அள்ளிவீசி, வழக்குப் போட்டாகணும், கடைவீதியிலே இருக்கிற பெரிய புள்ளிகள் பேரிலே, என்று வற்புறுத்த ஆரம்பித்துவிட்டா........."

"வக்கீல்டி, அவ! வழக்குநடத்தி, கெட்டிக்காரின்னு புகழ்பெற ஆசை. உன் தம்பியைக் கடைவீதியிலே அடிக்கடி வந்தாளே, அதற்காக வழக்குப்போட்டா, தானே நடத்தலாம், நல்லபேர் கிடைக்கும் என்கிற எண்ணம் ஏற்பட்டிருக்கும் பட்டுவுக்கு. அதற்காகத்தான் வந்திருப்பா! நீ, வேறேவிதமாக, எண்ணிக்கொண்டுவிட்டிருக்கறே. அவ்வளவுதான் விஷயம்"

"இதுபோலத்தான், சொன்னார், எங்களவர்! ஆனா, எனக்கல்லவா தெரியும், பட்டுவோட நோக்கம்"

"பொன்னி! இதைக்கேள்! கண்ணாலே பார்த்ததும் பொய், காதாலே கேட்டதும்பொய் என்று பெரியவா சொல்லி இருக்கரு. நீ, பட்டுவைப்பத்திக் கொண்டிருக்கற எண்ணமும் அதுபோலத்தான் என்று எனக்குத் தோணறது"

"உரத்துப் பேசாதிங்க. உங்களுக்குத் தோணுவதை மனசோடு போட்டுவையுங்க, காலடிச்சத்தம் கேட்கறது...கவனியுங்க..."

"ஆமாம்......பொன்னி! அவதாண்டி, வர்ரா பட்டு"

"விஷயத்தைத் துளிகூடக் கண்டுகொள்ளாதிங்க, வாயைக் கிளறுங்க, தன்னாலே கொட்டிவிடுரு பாருங்க"

"பட்டு! வா! வா! என்ன ஏதாவது பெரிய கொலைக்கேஸ் நடத்தறயா...இந்தப்பக்கமே காணோமே உன்னை..."

"அதென்ன, கொலைக்கேஸ் நடத்துவதுதானா பெரிய சாமர்த்தியம்னு எண்ணிக்கொண்டிங்களா......! கொலைக்கேஸ்தான் சர்வ சாதாரணமாச்சே. ஒரு வக்கீல், தன்னுடைய திறமையைக் காட்ட வேண்டுமானா, சட்டத்துக்குப் புது வியாக்யானம், தனியான பொருள் கொடுத்துத் தீரவேண்டிய, வழக்காகக் கிடைக்கணும்"

"அப்படிப்பட்ட வழக்கு என்ன ஏற்பட்டுவிடும், சட்டத்துக்கே, புதுசா விளக்கம் கொடுத்து, வாதாடுகிறவிதமா..."

"ஏன் இல்லை! மேகங்களை விரட்டித் தாக்கி, குளிரச்செய்து, செயற்கை மழை பெய்யும்படி செய்கிறார்களே, தெரியுமோ உங்களுக்கு..."

"பொன்னி! வழக்கு சம்பந்தப்பட்ட விஷயமா, நான் பட்டுவைக் கேட்கறபோது, நீ, ஏன் குறுக்கே நுழையறே, பெரிய ஜட்ஜ்மாதிரி......"

"பெரிய ஜட்ஜ்கள் இப்படி, வளவளன்னு பேசமாட்டாளே!"

"அப்படிக் கொடுடி, பட்டு! பொன்னியோட வாய், அப்பத்தான் அடங்கும்"

"ஆனா, மனதைத்திறந்து பேசுவதுதான் நல்லது. ஆமாம்! எனக்கு அதுதான் பிடிக்கும். இவங்க,தம்பி இருக்காருருபாருங்க, அடே அப்பா! ஊமையாப் பிறக்காதது ஒண்ணுதான் பாக்கி; நாம, அரைமணிநேரம் பேசினாலும், ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்டாலும், வாயைத்திறக்கணுமே! அதுதான் கிடையாது......"

'பட்டு! பலபேர், அவனுடைய அந்தப் போக்கைத் தெரிந்துகொள்ளாததாலே, அவனைக் கர்வம் பிடித்தவன் என்றுகூடக் கண்டிக்கறது உண்டு. ஆனா, அவன் வாயைத் திறந்து அதிகம் பேசாததற்குக் காரணம், என்ன தெரியுமோ! பக்குவமா, பாசத்தோட, புரிகிறமாதிரியாப்பேசத்தெரியாது. ஏமாளி, பட்டு! என் தம்பி!"

"கண்டதுக்கெல்லாம், பேசிக்கொண்டு இருப்பதுதான், அறிவாளி வேலையா!! அப்படிச்சொல்லி விடலாமா? உங்க தம்பி, ஏமாளியுமல்ல, தலைகனத்தவருமல்ல...... என்னமோ, என்னைக் கண்டாலே அவருக்கு ஒருவிதமான வெறுப்புன்னு நினைக்கறேன்..."

"அதென்ன, அப்படிச் சொல்றுளே பட்டு. ஏன், பொன்னி! பட்டுவைக் கண்டா, உன் தம்பிக்கு என்ன வெறுப்பு? காரணம்?"

"வெறுப்புன்னு, நான் நினைக்கல்லே! அவனுக்கு, ஒரே கூச்சம்... புதியவர்களோடு பேசறதுன்னா..."

"இது நல்லா இருக்குடி! பெண்களுக்குத்தான், கூச்சம் இருக்கும்னு பேரு! இவனுக்கு என்ன... கூச்சமாம், கூச்சம்! முனபின் அதிகப் பழக்கமில்லாத நிலையிலேயும், பட்டு, போய்ப் பேசரு; பதில் சொல்றதுக்கு, இவனுக்கு என்ன கஷ்டம்? கூச்சம்? ஏன், பட்டு! அவன் பதில் பேசமுடியாதபடியான, கேள்விகளாகப்போட்டு வாட்டினயா, என்ன?"

"அப்படி ஒன்றும் இல்லையே. வழக்கு நடத்தினா நல்லது. ஊரிலேயே, ஒரு பரபரப்பு ஏற்படும். கொள்ளை இலாபம் அடிக்கிறவர்களுடைய குட்டுகள் வெளிப்படும். உங்களுடைய சங்கத்துக்கும் ஊரிலே செல்வாக்கு வளரும்; ஆனதாலே, வழக்குப்போடச் சம்மதம்

(14-ம் பக்கம் பார்க்க)

மகிழ்ச்சி

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் அன்பு கணபதி அவர்கள், சென்னைத் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவராகத் தெரிந்து எடுக்கப் பட்டுள்ளார்.

தமிழ்ப் மொழியினிடத்து அவர் கொண்டுள்ள பற்றும் ஆர்வமும், கலப்பற்ற தனித்தமிழ் எல்லாராலும் பேசப்படுதல் வேண்டும், எழுதப்படுதல் வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

எனவே, தூய உள்ளம் கொண்ட அன்பு கணபதி அவர்களுக்கு இப்பதவி கிடைத்திருப்பது, உண்மையிலேயே அவர்தம் ஆர்வத்தை — தூய தமிழ்ப் பேணும் நோக்கத்தை நிறைவு பெறச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை — என்பதை இங்கு குறுப்பிட்டு, நமது பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆ—ர்.

காஞ்சீபுரம்

18–12–60.

தம்பி!

நெல்லைச்சீமை சென்றிருந்தேன்—நாலு நாட்கள்—பல இடங்கள்—மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகள்—எனவே, மடல் அனுப்ப இயலவில்லை. எனினும், திருநெல்வேலிச் சீமையிலே நான் கண்டு அளவளாவி அகமகிழ்ந்திட, பொதுக்கூட்டங்களிலேயும், தனியாகவும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் தோற்றத்திலே, கண்ணொளியிலே, கருத்தாழம் மிக்க உரையாடலிலே, புன்னகையிலே, புதியதோர் விறுவிறுப்பிலே, உன்னைக் கண்டேன்! உள்ளத்தால் ஒருவர் வடிவத்தால் வெவ்வேறு என்றன்றோ இன்று நமது கழகத்தோழர்களின் நிலைமை.

வாங்க அண்ணா! வாங்க அண்ணாச்சி! தடம் பார்த்து வாங்க! அதோ அந்தாலே பாருங்க! சொதி இன்னும் கொஞ்சம் போடட்டுமா அண்ணாச்சி!—என்று இவ்விதம் மாவட்டத்துக்கு மாவட்டம், பேச்சு.. எனினும், எங்கும் தமிழ் உள்ளம்தானே காண்கிறோம். அஃதேபோலத்தான் தம்பிமார்கள் எந்தெந்தச் சீமையில் இருக்கிறார்களோ, அந்தந்த இடத்திலே வழக்கிலே இருந்துவரும் முறைப்படி, பேசுகிறார்கள், என்றாலும், எங்கும் ஆர்வமும் எழுச்சியும், நம்பிக்கையும் நல்லுணர்வும், பொங்கிப் பொலிவளித்தவண்ணமிருக்கிறது. பக்குவமாக அமைக்கப்பட்டுள்ள பூந்தோட்டம் சென்றால், தூய்மையைக்காட்டி நிற்கும் முல்லையும் மல்லியும், அந்திவானத்தை நினைவூட்டும் வண்ணப்பூக்கள் பலவும், வடிவத்தால் வகையால் வெவ்வேறாகத் தெரியும்—காண்பதற்கு அத்தனை பூக்களும் அழகுடன் விளங்கி—எல்லாம் ஒருசேர மணம் பரப்பி, மனதுக்கு ஈடற்ற ஓர் மகிழ்ச்சியைத் தருகிறதல்லவா? அதுபோலவே, கழகத் தோழர்கள், கடலோரம் வாழ்ந்திடுவோராகட்டும், காடுடை உள்ள சிற்றூரில் உள்ளவர்களாகட்டும், வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளும், கொள்வோரும் கொடுப்போரும் எழுப்பிடும் ஒலிமிகு அங்காடி கொண்டதாக உள்ள சீரூர் வாழ்வோராக இருக்கட்டும், பல கல் பாழ்வெளியைக் கடந்தான பிறகு, பசுமையற்று, பாங்கற்று, வறுமை கொட்டியதால் வடிவம் கெட்டு, பியந்துபோயுள்ள கூரைகள், சரிந்துகிடக்கும் மண் சுவர்கள், செல்லரித்துப்போன வாயற்படிகள் எனும் நிலையிலுள்ள, இருண்ட பட்டிதொட்டியில், பாடுபட்டுப் பலன் காணமல், பகல் உண்டு, இரவில் அதை எண்ணிக்கொண்டு, படுத்துப் புரண்டு கிடந்திடுவோராயினும், அகில உலகச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள வாய்ப்புப் பெற்ற கல்வி வளம் பெற்றோராயினும், மலையும் மடுவும், வயலும் வாவியும், கருகிய மொட்டும் கசந்த கரும்பும், வாலிப நரையும் வயோதிகர் உழைப்பும், கந்தலாடையும் காச இருமலும், என்பனவற்றையே, பாடம் தந்திடும் பள்ளிகளாக்கிக்கொண்டுள்ள

‘மேனி சிலிர்க்குது...!’

குறிச்சியில் உழல்வோராயினும், எங்கும் எவரிடமும் தம்பி! இன்று, இதுநாள்வரை நான் கண்டிராத ஓர் ஆர்வம், தமக்கு ஓர் நல்ல எதிர்காலம் உருவாகிக் கொண்டிருக்கிறது, அந்தத் தூயதொண்டிலே நமது கழகம் ஈடுபட்டிருக்கிறது. ஈடுபட்டிருப்பதால், இல்லாதானை ஏய்த்து ஏய்த்துக் கொழுத்திடும் வல்லான், அந்தக் கழகத்தை அழித்திடத் துடிக்கிறான், எனவே, நாம் நொந்துகிடப்பினும், நமக்காகப் பணியாற்றும் கழகத்துக்குத் துணை நிற்கவேண்டும் என்ற ஓர்விதமான 'பந்தபாச' உணர்ச்சி உருவாகி இருப்பதைக் காண்கிறேன். மாடோட்டும் சிறார் முதல் காரோட்டும் தொழிலாளிவரை, கரும்பு பயிரிடும் காராளரிலிருந்து, இரும்பு காய்ச்சி அடித்திடும் உலைக்கள உழைப்பாளி வரையிலே, ஏதோ ஓர் விதமான, —என்றால் தெளிவாக விளக்கக்கூடமுடியவில்லை— பற்றுகாட்டுவது தெரிகிறது, துணைநிற்க இசைவது புரிகிறது, தோழமை கொண்டாடுவது காண்கிறேன். அத்துணை பேரும், ஐயந்திரிபற, நமது கொள்கைகளை அறிந்துகொண்டார்களா, அலசிப் பார்த்தார்களா, அடுக்கடுக்காக மாற்றார்கள் ஏவிடும் கண்டனங்கள், கருத்துள்ளனவா, அன்றிக் காழ்ப்பின் விளைவா என்பதுபற்றியேனும் விளங்கிக் கொண்டனரா, என்று அவர்கள் தமது இதயத்தை வழங்கிடும்போதெல்லாம், நான் எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்—வியப்புறுகிறேன். அத்துணை, ஆற அமர இருந்து ஆராய்ச்சி நடத்திட; அவர்கட்கு ஓய்வும் இல்லை, வாய்ப்பும் கிடையாது. எனினும் நம்மிடம் ஓர் பற்று, நாம் அவர்களுக்காக என்ற ஓர் நம்பிக்கை, அந்த மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது—கழகத்தை மாற்றார்கள் தாக்கத் தாக்க, இழிமொழியினர் பழிச்சொற்களை உமிழ உமிழ, அந்த நம்பிக்கை உறுதிப்படுகிறது, வளருகிறது, உரம் ஏறுகிறது! வைரம் பாய்ந்தது என்கிறார்களே—அதுபோல.

தம்பி! பாரதியார் பாடலொன்று நான் அடிக்கடி கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். அதிலே ஓரிடத்தில், மெச்சி உன்னை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி—என்றிருக்கும். அதன் முழுப்பொருளை உணரவேண்டுமானால், நமது கழகத்தோழர்களில் எவருக்கேனும், ஒரு ஊராட்சி மன்றத்திலே வரவேற்பு அளிக்கப்படும்போது, மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்துப், பாராட்டுரை வழங்கிப் பரிவுகாட்டிடும்போது, விழா காணக்கூடிடும், நமது கழகத் தோழர்கள் களிநடமாடிடுவதைக் காணவேண்டும்! உள்ளபடி அவர்களுக்கு மேனி சிலிர்க்கிறது! நமது கழகத்தவருக்கு, நமது தோழருக்கு, இந்தச்சிறப்பு நடக்கிறது! ஏற்றம் பெறுபவர், பாராட்டுதலை வாங்கிக்கொண்டு நன்றி தெரிவித்து நிற்போர் மட்டுமல்ல, கழகம் ஏற்றம் பெறுகிறது; கழகத்துக்குப் பாராட்டுக்கிடைக்கிறது என்று எண்ணி எண்ணி, மகிழ்ச்சியால் துள்ளுகிறார்கள். ஊராட்சி மன்றங்களுக்கு, வரவேற்புக்கொடுப்பது, வாடிக்கையாகிப் போயுள்ள அலுவலாகிவிட்டிருக்கிறது என்று கூடக் கூறலாம். எனவே, ஊராட்சி மன்றத்தினர் 'உளங்கனிந்து' வரவேற்புத்தரும்போது, அவர்களுக்கு, புதியதோர் களிப்புப் பூத்திடக் கூடச்செய்யாது. பலமுறை, வரவேற்புகள், பல திறப்பட்டவர்களுக்கு வழங்கி வழங்கி, பழகிப்போய் விட்டிருக்கிறார்கள். நான் இந்தச் சுற்றுப்பயணத்தின் போது காயல் பட்டினம் ஊராட்சி மன்றத்தின் வரவேற்பினைப் பெற்றேன் — விழாவுக்காக அழகிய பந்தல் அமைத்திருந்தனர். அதே இடத்தில், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களுக்கு முன்னாள் 'ஊராட்சிமன்றம் வரவேற்பு அளித்ததாகவும், மறுநாள் அன்பர் ஆச்சாரியாருக்கு வரவேற்பு ஏற்பாடாகி இருப்பதாகவும் அறிந்தேன். இதுபோலத்தான் ஊராட்சிமன்றங்கள் பல்வேறு தரத்தினருக்கு, வரவேற்புகள் வழங்குகின்றன! எனவே, அவர்களுக்கு, மேனிசிலிர்த்திடக் காரணம் இருக்காது. செருக்குடன் செப்புகிறேனே என்று எவரும் எண்ணிவிடவேண்டாம்—உள்ளதைச் சொல்லுகிறேன் — எனக்கு இத்தகைய வரவேற்புகளைப் பெறும்போது மேனி சிலிர்ப்பது இல்லை. ஒரே ஒருமுறை, என்மேனி சிலிர்த்ததுண்டு—அது, மீண்டும் திரும்பிவரமுடியாத 'அந்தக்காலத்தில்'—ஈரோடு நகராட்சி மன்றத்தின் வரவேற்பு எனக்கு அளிக்கப்படவேண்டும் என்று பெரியார் முன்னின்று நடத்திய விழா—ஊர்வலமாக, பழையகோட்டைக் காளைகள் பூட்டிய வண்டியிலே நான் அமர்ந்துகொண்டிருக்க, வெண்தாடி காற்றினிலே அசைந்தாட, திராவிடச் செங்கோலாகிடத் தக்க வலிவுபெற்ற கைத்தடியை ஏந்திக்கொண்டு, அரிமா நோக்கு இதுதானோ என்று எவரும் எண்ணிடத்தக்க, தனியானதோர் பார்வையை, இப்புறமும் அப்புறமும் செலுத்திக்கொண்டு, பெரியார் ஊர்வலத்திலே நடந்துவந்தபோது—அன்று—உள்ளபடி எனக்கு மேனிசிலிர்த்தது. இப்போது, மேனி சிலிர்த்திடுவது இல்லை! நன்றி கொள் உள்ளம் உண்டு!!

ஆனால், நமது தோழர்களுக்கு, இப்படி ஒரு வரவேற்புக்கூட்டம் கண்டால், ஊராட்சிமன்றத் தலைவர் மாலையை அணிவிக்கக்கண்டால், அடே அப்பா! என்ன களிப்பு! எத்துணை பெருமை! என்ன பூரிப்பு! மேனி சிலிர்க்கிறது!! ஒருவரில் மற்றவர், என்றாகிவிட்டோம். நாம் அவ்வளவு தூரம் கலந்துபோயிருக்கிறோம்! நமக்குள் ஏற்பட்டுவிட்டுள்ள தொடர்பு, அரசியல்கட்சிகளிலே காணக்கிடக்கும், சதுரங்கக்காய்களின், இடம் பெறும் வகையினது அல்ல—இது, நெஞ்சோடு நெஞ்சம் உறவாடிடும் நிலை! தம்பி! எதைவேண்டுமானாலும் இழந்துவிடலாம், மீண்டும்பெறலாம், எற்றுக்கு என்றுகேட்டு அலட்சியப்படுத்திவிடக்கூடச் செய்யலாம், ஆனால், இது இருக்கிறதே, 'நெஞ்சோடு நெஞ்சம் உறவாடும்' தன்மை, நாம் இழக்கக்கூடாத செல்வம்—வேறு எந்தக்கட்சியிலும் காணக்கிடைக்காத கருவூலம்—பழங்காலத்துக் கதையொன்று உண்டு, கடவுளர் சிந்திடும் கண்ணீர்த்துளிகளே, கடலிடை முத்துகளாக மாறின என்று—நமக்குள் ஏற்பட்டுவிட்டுள்ள இந்த இழைந்துள்ள இதய உறவு, நாம், தனியாகவிடப்படுகிறோமே, திக்குத் தெரியாத காட்டிலே, சிறகு வளராத நிலையிலே கிளம்பிடும் புள்ளினம்போலானோமே, நமது எதிர்காலம் யாதோ? இருள் மருட்டுமோ, ஒளிக்கீற்றாகிலும் கிடைக்குமோ, என்று எண்ணி, ஏக்கமுற்று, இந்நிலை ஏற்பட்டுவிட்டதே என்று கசிந்து உகிர்த்த கண்ணீர்த்துளிகள், தம்பி! நான் குறிப்பிடும் கருவூலமாகி விட்டிருக்கிறது. இதை இழந்து மற்ற எதைப்பெறுவதும், கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவதற்கு ஒப்பாகும்.

இம்முறை, என்னைக் காணும்போது, நமது தோழர்களுக்கு, மகிழ்ச்சி பொங்கிட மற்றோர் காரணம் இருந்தது—மேயர் தேர்தல்!

ஊரூருக்கும் காங்கிரஸ் தலைவர்கள், இம்முறை மூக்கறுபட்டுவிடும், முக்காடிட்டு மூலைக்குச் செல்வார்கள், மேயர் ஆகமுடியாதது மட்டுமல்ல, பிளவு ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக்கொள்ளப் போகிறார்கள்—பாருங்கள் அந்த வேடிக்கையை—என்று நிறையப் பேசி வைத்திருக்கிறார்கள். வெடிகள், வாணங்கள், அறிவிப்புப் பலகைகள், ஊர்வல ஏற்பாடுகள் எல்லாமே தயாராகிவிட்டிருந்ததாம், காங்கிரஸ் வட்டாரத்தில்—பல ஊர்த் தோழர்கள் கூறினர். மேயர் தேர்தலில், கழகம் தோற்றது என்ற செய்தி கிடைத்திடும், தாரை தப்பட்டை அடித்துக்கொண்டு, சங்கு ஊதிக்கொண்டு, 'சாவு' ஊர்வலம் நடத்தவேண்டும் என்றுகூடத் திட்டம் போட்டிருந்தனராம்; எனவே, நமது தோழர்கள், நெருப்பின்மீது நின்றுகொண்டிருந்தார்கள்! வெற்றி கிடைத்ததும், தந்தையிடம் சென்று தகதகவென ஆடும் மகனும், தம்பியின் முதுகினைத் தட்டிக் கொடுத்திடும் அண்ணனும், அரும்பு மீசையை மேலும் அழகுதர முறுக்கியபடி, அது கீறிடுவதால் கன்னத்துக் கதகதப்புக் கண்ட, காதலி முன்நின்று, எப்படி என் வெற்றி! என்று கேட்டிடும், காதலனும், ஆக இப்படி எல்லாம் ஆகிவிட்டிருக்கின்றனர், நமது தோழர்கள். என்னைக் காணவே அவர்களுக்கு, மேலும் மகிழ்ச்சி பொங்கிற்று! மேனி சிலிர்த்த நிலை!! மேயர் பதவி, முதலமைச்சர் நிலை போன்றது அல்ல—தெரியும்—புரிகிறது—ஆனால், அந்த இடம் நமக்குக் கிடைப்பது, நாம் வெற்றிப் பாதையிலேதான் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதையன்றோ எடுத்துக் காட்டுகிறது—உரியவளைக் காணுமுன்பே, அவள் வளை ஒலிகேட்டு இன்புறுவது, உண்டன்றோ! அஃதேபோல!!

"என் அண்ணா! இருவர் கேட்டார்களே, வாய்ப்பு அளித்திடும்படி — என்ன காரணம் கொண்டு, முனுசாமியைத் தேர்ந்தெடுத்தீர்கள் என்று, ஒருவராவது கேட்க வேண்டுமே! உஹ-ம்! ஒருவரும் கேட்கவில்லை. அத்துணை அலட்சியமா, பிரச்சினையிலே, அல்லது என்னிடம் உள்ள நம்பிக்கையின் ஆழமும் அழுத்தமும் அவர்களைச் சிந்திக்க வைக்கவில்லையா, என்றால், தம்பி! அது அல்ல—அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்து இருக்கிறார்கள்—கழகத்துக்கு வெற்றி—கபடத்தை வீழ்த்திப் பெற்ற வெற்றி—தொடர்ந்து வெற்றி— இந்த எண்ணம், அவர்களை வேறு எது குறித்தும், நினைத்திட வைக்கவில்லை. மழலை பேசிடும் மதலை, தனக்கென்று தந்த கனியைக் குழப்பி, நமது வாயிலே திணித்திட, அதைக் குதப்பிக்கொண்டிருக்கும்போது, பெற்றளித்த பெருமாட்டி, என்ன ஒரே கொஞ்சல்! என்று கேட்க, உள்ளத்தை வென்றான், பதில் சொல்வது, எப்படி இருக்கும்! வார்த்தைகள் தெளிவாக இரா—கனிபோலவே குழம்பிக் கிடக்கும்—கனியினும் இனித்திடும்! அது போன்ற முறையில்தான், நமது கழகத் தோழர்கள் மேயர் தேர்தல்பற்றிப் பேசினர், உள்ளம் நெகிழ்ந்து. மேனி சிலிர்த்திடும் நிலை!

எனக்கே, தம்பி! மேயர் தேர்தலிலே, நாம் பெற்ற வெற்றி எத்துணை மகிழ்ச்சிக்குரியது என்பது, ஆயிரமாயிரம் ஆசைத் தம்பிகள் மேனி சிலிர்த்த நிலையில் இருந்ததைக் கண்டபோதுதான், பளிச்சென்று தெரிந்தது. செடியில் உள்ள மலர், செண்டாகி, சேரிடம் அறிந்து சேர்ந்த பிறகு, தனியான, புதிய, கவர்ச்சி பெற்று, அளிக்கிறதல்லவா! அதுபோல!!

இந்த மகிழ்ச்சியைத் தேடிப்பெற்று, திருநெல்வேலிச் சீமையிலே, நண்பர்கள் C. V. இராசகோபால், அன்பில் தருமலிங்கம், மதுரை முத்து, மதுரை துரைஅரசு, பாண்டி, நெல்லை இரத்தினவேலு பாண்டியன், தூத்துக்குடி சிவசாமி ஆகியோர் உடனிருந்து உவகையை உயர்வானதாக்கிட, மதுரை டாக்டர். அருணாசலம் அவர்கள், வழிமடக்கி விருந்தளித்து, களிப்பூட்ட, நாலு நாட்கள் சுற்றிவிட்டு வந்தேன். நாலாயிரத்து ஐம்பது ரூபாய், தேர்தல்நிதி, தந்தனர்—பெற்று மகிழ்ந்தேன்—எனினும் ஒரு கணம்தான்—என்னையோவெனில், அது போய்ச்சேரவேண்டிய இடம் போய்ச் சேரட்டும் என்று, டாக்டர் வாங்கிக்கொண்டார், பொருளாளர் கருணாநிதியிடம் சேர்ப்பிக்க!!

கேட்டது கிடைத்ததா என்று கேட்கத்தோன்றுகிறதல்லவா, தம்பி! நான், இவ்வளவு தரவேண்டும் என்று கேட்கவில்லை; ஆனால் நெல்லை மாவட்டச் செயலாளர் சிவசாமி, நாலாயிரம் தருவதாக வாக்களித்தார், நிறைவேற்றியுமிருக்கிறார்—ஆனால், இது முதல் தவணை — அவரறிவார், அறிந்தோர் அவர் பணி விரைவிலே வெற்றி பெற உடனிருந்து செயலாற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

தம்பி! தேர்தல் செலவுக்காக, காங்கிரஸ் கட்சியினால் இலட்ச இலட்சமாகப் பணத்தை மிக எளிதாகத் திரட்டமுடியும், பட்டப்பகலில் சட்டத்தின் கண்களைப் பணத்திரை போட்டு மூடிவிட்டு, கொள்ளை கொள்ளையாகப் பணத்தைக் குவித்துக்கொண்டுள்ளவர்கள், பாதுகாப்புத் தேடிக்கொள்ள, காங்கிரஸ் கட்சிக்கு வலியச் சென்றும் பொருளைக் கொட்டிக் கொடுப்பர் என்பதும் புரிகிறது. என்றாலும், நாம், ஏழைஎளியவர்களின் சார்பிலே, பணியாற்ற, தேவைப்படும் தொகையினைத் திரட்டமுடியும் என்ற நம்பிக்கை நமது தோழர்களுக்கு, நிரம்ப இருக்கிறது. அதிலே நமக்கு வெற்றியின் அறிகுறிகள் தென்படும்போதே, நமது கழகத் தோழர்களுக்கு மேனி சிலிர்க்கிறது.

கொளுத்தும் வெயிலில் பகல் பன்னிரண்டு மணிக்குக் கோயில்பட்டிக் கூட்டம். இசைபாடுவோர், இராக இலாபனை நடத்தி, கீர்த்தனங்கள் பாடி, பக்கவாத்தியக்காரருடன் வித்தைகள் செய்துகாட்டி, திருப்புகழ், காவடிச் சிந்து, அருட்பா என்று இப்படி எல்லாம் பாடுவார் — என்ன பாடினாலும், பணம் வராது! கடைசியில் மங்களம் பாடி முடித்த பிறகுதான் பணம் தருவார்கள். அதுபோல் நள்ளிரவுப் பேச்சு, மழையின் ஊடே பேச்சு, என்று பல ஊர்களில்—நெல்லையிலும் தூத்துக்குடியிலும் சிறப்புச் சொற்பொழிவுகள்—எனினும் பணம் தந்தாரில்லை, நண்பர் சிவசாமி—கோயில்பட்டியில் 'மங்களம்' பாடியபோது, நாலாயிரம் தந்தார். தம்பி! அந்தத் தொகையை ஒரு தட்டிலே (பித்தளைத் தட்டுதான்!!) வைத்து, என்னிடம் தந்த உடனே, பார்க்கவேண்டுமே அங்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை! மேனி சிலிர்த்தது!! நமது கழகம் தேர்தல் நிதி திரட்டுகிறது — அதற்கு நாலு ஆயிரம் கிடைத்தது—என்பது காணும்போது அவர்களுக்கு மேனி சிலிர்க்கிறது. காங்கிரசுக்குப் பணம்

சேருகிறது. இலட்சக் கணக்கில்—அது ஒரு பிரமாதமாகத் தோன்றுவதில்லை நமது கழகத்தவருக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கேகூட — ஏனெனில் காங்கிரஸ், கோடீஸ்வரர்கள் உள்ள கட்சி, அதிலே இலட்சக் கணக்கிலே பணம் திரட்ட முடிவதிலே, ஆச்சரியப்படவோ, செயலாற்றியவர்களைப் பாராட்டவோ, என்ன இருக்கிறது. பணம் படைத்தோன், வெள்ளித் தட்டிலே வைத்தளிக்கப்படும் பாதாம் அல்வாவில், கால்பாகம் தின்கிறான்; தின்னும்போதுகூட, கிடைத்திருக்கவேண்டிய கால் இலட்சம் இலாபத் தொகை, குறைந்துவிட்டதை எண்ணிக்கொண்டுவிட்டால், இனிப்புப் பண்டமே கசப்பாகிப் போகிறது. பாடுபட்டவன், பெற்ற பணத்தைக் கொண்டு, செட்டாகக் குடும்பம் நடத்தும் இல்லாள், அன்புடன் அளித்திடும் உண்டியை அவளுடன் உரையாடிக்கொண்டே உண்டு மகிழ்பவன், கடைசி உருண்டையைக் குதப்பியபடி, இலையோடு ஒட்டிக்கொண்டு விட்டிருக்கும் ஊறுகாயை எடுக்க முயலுவதுகண்ட, இல்லக்கிழத்தி குறுநகை புரிந்து, இலை பிய்த்துக்கொண்டு வந்துவிடப் போகிறது!—என்று கேலி பேசிட, வெட்கத்தை வெறும் சிரிப்பால் மறைத்தபடி, ஊறுகாய் கிடைக்காவிட்டாலும், அதைத் தொட்ட விரலைச் சுவைத்திடுகிறானே, அப்போது அவனுக்குக் கிடைத்திடும் சுவையும், அது அளித்திடும் மகிழ்ச்சியும், பாதாம் அல்வா சாப்பிட்ட பத்து இலட்சத்தாருக்குக் கிடைக்குமா, என்ன! நாம் தேர்தல் நிதி திரட்டுகிறோம்—சிறுதொகை—அதற்குப் பெரும்பாடு! என்றாலும், அதிலே நாம் வெற்றி காணும்போது, ஏழைக்கு ஊறுகாய் தொட்ட கை தரும் சுவை போன்றதோர் சுவை காண்கிறோம். இல்லத்தில் உண்கிறோம்! இல்லக்கிழத்தி அருகே இருக்கிறாள், எந்தப் பண்டத்திலே எந்தச் சுவை குறைந்திருந்தாலும், இன்மொழியால், புன்னகையால் ஈடுசெய்து மகிழ்வளிக்க! பாடுபட்டுப் பிழைக்கிறோம் என்ற எண்ணம், தேனாகிறது!!

அஃதேபோலத்தான் தம்பி! தேர்தல் களம் செல்கிறோம், பதவி பறிக்க அல்ல; தாயகம் காண, களம்பல சென்றாகவேண்டும், அதிலே இது ஒன்று என்ற உணர்வுடன். அங்கு செல்ல, இந்தத்தொகை பயன்படுத்தப்படும் என்று எண்ணும்போதே மகிழ்ச்சி பொங்கிவழியத்தானே செய்யும். அதற்கான தொகையினைத் திரட்டிடமுடியும், திரட்டித்தரத் தோழர்களால் முடிகிறது, திரட்டச் செல்லும்போது, பொதுமக்கள் ஆதரவு தருகிறார்கள் என்பது நமக்கு, இன்ப உணர்ச்சிகளை, எடுத்ததை முடித்திடுவோம் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

நாலு ஆயிரம் என்று நண்பர் அறிவித்ததும், கூடியிருந்தோர், கையொலி செய்தனர்—களிப்பினைக் காட்டிட! ஏன்? அவர்கள், அதுவரையில் ஆவலுடன்—அச்சம் கலந்த ஆவலுடன் அமர்ந்திருக்கிறார்கள்—நல்ல தொண்டாற்றத்தான் பணம் கேட்கிறார்கள், தரவேண்டும் என்று மனம் கூறுகிறது, மடியோ நமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது — மிகமிகச் சிறிய தொகைதான் நம்மாலே கொடுக்கமுடிகிறது — நம்மைப் போலத்தானே மற்றவர்கள், நம்முடன் உள்ளோரில் பெரும்பாகம்—இவர்கள் சேர்ந்து கொடுக்கும் தொகை, எப்படி அதிகமாக இருக்கமுடியும்—ஒரு ஐந்நூறோ ஆயிரமோ சேருவதே கடினம்—என்று எண்ணி ஏக்கத்துடன் இருக்கின்றனர், அந்த நிலையில் நாலாயிரம் என்று அறிவிக்கப்பட்ட உடனே அவர்களுக்கு பெருமை கலந்த களிப்பு! நம்மாலே நாலாயிரம்! நமது கழகத்துக்கு நாலாயிரம்! நாம் சிறு தொகைதானே கொடுத்தோம் என்று ஆயாசப்பட்டுக்கொண்டோம், சிறுதுளி பெருவெள்ளமாகிறது! இதோ நாலாயிரம்! இதே முறையிலே முயன்று பணியாற்றினால், கழகம் குறித்துள்ள தொகையைச் சேர்த்துவிடமுடியும்! — தம்பி! இது போன்ற எண்ணங்கள், அவர்களை மேனி சிலிர்த்திட வைக்கிறது.

நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சி, நம்முடையது போல அல்ல — அது காங்கிரசாரின் ஆகஸ்ட்டு கிளர்ச்சிக்கு அண்ணனாகிவிட்டது. இந்திய துரைத்தனம் பல நூறுகோடி ரூபாய் செலவிட்டு அமைத்துள்ள படைபலம், நாகர்களை அடக்கமுடியவில்லை—இன்றுவரை. அதற்கு மாறாக, சின்னாட்களுக்கு முன்பு டில்லி அனுப்பிவைத்த படையினரில், நான்கு பேர்களை, விமானப்படையைச் சேர்ந்தவர்களை, நாகர்களின் விடுதலைப் படையினர், சிறைபிடித்துவிட்டனர். டில்லி அரசிடம் உள்ள படை மிகப் பெரிது! அதிலே நாலே நாலுபேர்தான், நாகர்களிடம் பிடிபட்டனர். ஆனால், அந்தச் செய்தி கேட்டதும், நாகநாடு முழுவதும் தலைநிமிர்ந்தன்றோ நின்றிருக்கும். எம்மை அழிக்கவந்தார்கள்—எம்மிடம் பிடிபட்டார்கள்—கட்டிப்போட்டுவைத்திருக்கிறோம் என்றன்றோ விடுதலைப்போரைத் தொடர்ந்து நடாத்திவரும் நாகர்கள் பெருமிதத்துடன் கூறுவர். அம்மட்டோ! நாகர்களை அடக்க, அழிக்க, ஏவப்பட்ட டில்லி படையினைச் சேர்ந்த நால்வரை, நாகர் சிறைபிடித்தனர் என்று கேள்விப்பட்டதும், விடுதலை வீரர்களாம் நாகர்களுக்கு மேனி சிலிர்த்துத்தானே போகும்!!

தம்பி! கேள்விப்பட்டால் நாமே, மேனி சிலிர்த்திடும் நிலை பெறுவோம்—அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது, இதை ஒட்டி.

பிடிபட்டவர்களைத் தேடி அலைகிறார்கள், டில்லி அரசினர். அந்த டில்லி அரசுக்கு, நாகர்களின் விடுதலை இயக்கம், சொல்லி அனுப்புகிறது, சிறைப்பட்ட நால்வரை விடுதலைசெய்து விடுகிறோம், விடுதலை செய்து விடும்படி, டில்லி அரசு, எங்கள் நாகநாட்டு அரசைக் கேட்டுக்கொண்டால், என்பதாக!!

கேட்கும்போதே மேனி சிலிர்க்கும், பேச்சல்லவா இது! டில்லியில் ஒரு அரசு—நாகநாட்டில் ஒரு அரசு! முன்னையது பெரிதாக இருக்கலாம், நாகருடைய அரசு அளவு சிறியதாக இருக்கலாம் — எனினும், நிலையில், இரண்டும் ஒன்றே! இதுவும் அரசு, அதுவும் அரசு!—என்று எடுத்துக்காட்டும், விடுதலை வீரம் கொழுந்துவிட்டெரியும் ஆர்வப் பேச்சல்லவா, அது, எனவேதான் மேனி சிலிர்க்கிறது.

மலைவாழ் மாவீரர்கள் தமக்கென்று வகுத்துக் கொண்ட முறைப்படி, விடுதலைப் போரினை நடாத்தி வருகின்றனர். வீரச் செயல்கள் நிகழும்போது, நாகர்களின் மேனி சிலிர்க்கிறது,

நாம், திராவிட விடுதலைக்கு வகுத்துக்கொண்டிருப்பது அறவழி நின்று உரிமைக்கான கிளர்ச்சி நடாத்துவது; அதற்கான களங்களிலே ஒன்று, தேர்தல் களம், அந்தக் களம்சென்று பணிபுரிந்திட, பொதுமக்களின் நல்லாதரவு மிக மிகத் தேவை. சிவசாமி திரட்டித் தந்த நாலாயிரம், இந்த ஆதரவு தர, மக்கள் தயாராக உள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவது கண்டுதான், கழகத் தோழர்களின், மேனி சிலிர்க்கிறது. அண்ணா! என்று அழைத்து மதுரை முத்து, நான் தந்தது ஐந்து ஆயிரம்—என்று என்று கவனப்படுத்துகிறார். அது மட்டுமல்ல! இந்தத் திங்கள இறுதியில் இன்னும் பெற வருக என்று அழைக்கிறார்.

அந்த மாவட்டங்கள், இருமுறை வரவழைத்துத் தரும் தொகையை எமது வாவட்டம், ஒரே நாளில்தர இருக்கிறது என்று சுவையூட்டுகிறார், வடாற்காடு மாவட்டச் செயலாளர் தருமலிங்கம். எவ்வளவு என்று கேட்டு அவரே பதிலளிக்கிறார், பதினைந்தாயிரம் என்று.

இந்த மகிழ்ச்சியூட்டும் உணர்வுடன் உறவாடி மகிழ்ந்துகொண்டிருப்பதனால்தான், தம்பி! ஊர்விஷயம், உலக விவகாரம், இவைபற்றி எழுதாமல், நமது குடும்பவிஷயமாகமட்டும், குதூகலப்படத்தக்க பகுதியை இந்தக்கிழமை எழுதினேன். மகிழ்ந்திரு, ஆனால், விழிப்பாக இரு! பணியாற்றியபடி இரு, புதிய நம்பிக்கையுடன்! நாடு நமது நோக்கத்தை அறிந்து, ஆதரவு தரும், கட்டம் பிறந்திருக்கிறது. மேனி சிலிர்க்கிறது!

அண்ணன்,



தன் நாடு நோக்கி!

கனகு

இரவு இன்னும் நடுக்கூற்றை அடையவில்லை. எங்கணும் பெரும் பனி பெய்துகொண்டிருக்கிறது. உயிர்த் துடிப்பு நிறைந்த பெரிய நகரின் மத்தியில், அதன் பரபரப்பை எல்லாம் தன்னுடைய தாக்கிக்கொண்டு இயங்கும் பெரிய தெரு அது. அங்கு இப்போது பரபரப்பு இல்லை; கலகலப்பு இல்லை; சந்தடி இல்லை; நெருக்கடி இல்லை. அவை எல்லாம் எங்கு போய் மறைந்து, ஒளிந்து, மாய்ந்து விட்டனவோ! உயிர் என்று பெயர் சொல்லக்கூடிய எதனையும் காண முடியவில்லை. உயிர் என்று பெயர் சுமந்து . வீதியிலே உலவுகின்ற, திரிகின்ற, ஊர்கின்ற, உழல்கின்ற அத்தனையும் ஓடி மறைந்துவிட்டன. எல்லாம் அவ்வவற்றுக்கென்று ஒதுக்கிக்கொண்டுள்ள, ஒதுக்கப்பட்டுள்ள மூலை முடுக்குகளிலே ஒண்டி, ஒதுங்கிக்கொண்டு விட்டன. அவை தம்மை மறந்து, தாம் வதியும் உலகை மறந்து, சுற்றுச் சூழ்நிலையை மறந்து, அவ்வேளை பெய்துகொண்டிருக்கும் பெரும்பனியை மறந்து, அது புரியும் கடுங்குளிரை மறந்து, பெருந்துயிலில் ஆழ்ந்து கிடக்கின்றன.

ஆனால்,

ஓரே ஒரு உயிர் மட்டும், உருவம் மட்டும் ஊர்வதுபோல் நடந்து தடுமாறித் தத்தளித்துக்கொண்டு வருகின்றது. இடுப்பிலே பழுங்கந்தல் வேட்டி. மேலே கிழிந்து நைந்து போன சட்டை. தலையிலே சாமானியக் கந்தலை நல்லாடை என்று சொல்லும் பழங்கந்தல் வேட்டியின் ஒரு சிறு துண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட பொத்தல்கள் உள்ள துண்டு.

மூன்று நாட்களாக அவன் அந்தப் பகுதியைச் சுற்றிக்கொண்டிருக்கிறான். நான்கு நாட்களாகி விட்டன அவன் உணவு என்ற பொருளினைக் கண்டு. நான்கு நாட்களும் அவன் உறங்கவில்லை. காரணம், உறங்குவதற்கோர் இடம் அவனுக்குக் கிட்டவில்லை. ஒரு திண்ணை வேண்டாம்; தாழ்வாரம் வேண்டாம்! வேறு ஒதுக்கிடம் வேண்டாம்! ஒரு சந்தோ, பொந்தோ, மூலையோ, முடுக்கோ கிடைத்தால் போதும், அவன் முடங்கிக்கொள்ள. கிடைக்கவில்லையே! 'ஏன், நடைபாதை இல்லையா? மரத்தடி இல்லையா?' என்று கேட்கின்றீர்களா? இருக்கின்றன. ஆனால் அங்குகூட அவனுக்கு அனுமதி இல்லை படுப்பதற்கு. முதல் நாள் அந்த முயற்சியில் அவன் ஈடுபடவில்லை; — அங்கு ஆட்சிபுரியும் பெரும்பனியும், கடுங்குளிரும், அதற்கு இடந்தா மறுத்தன அன்று. இரண்டாவது நாள் அந்த முயற்சியில் ஈடுபட்டான். முயற்சி பலனளிக்கவில்லை. போய் அமரும் இடத்திலிருந்தெல்லாம் அவன் துரத்தப்பட்டான். எங்கோ அடக்கமான இடத்தில் ஒதுங்கி நின்றபடியோ, அமர்ந்தபடியோ தெருவைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் காவலர் ஓடிவந்து அவனை வெருட்டினர்; துரத்தினர், ஓட்டினர்.

அந்த நாடு வேற்று நாடு. அந்த நகரம் வேற்று நாட்டுத் தலைநகரம். அங்குள்ளோர் பேசுவது வேற்று மொழி. அவன் பேசுவது தமிழ் — மூத்தமிழ் என்ற பெருமை பெற்ற மொழி; மூத்தகுடி என்று புலவர்கள் உயர்வு பேசிப் பாராட்டும் பெருங்குடி மக்கள் பேசுகின்ற மொழி. அவனுடைய சொந்த மொழியாம் தமிழ்மொழி தெரிந்தோர் அங்கு மிகச் சிலர். அந்தச் சிலரிலே, அவனையொத்த, இன்னும் தாழ்ந்த — பிச்சைக்காரர்கள் பலர். கூலிகள், எடுபிடிகள், ஏவலர்கள் எனப்படுவோர் சிலர். சும்மா பெயருக்கு உயர்நிலையில் உள்ளவர் என்று சொல்லக்கூடியவர்கள்கூடத் தமிழர் அங்கு சிலர்.

இந்தத் தமிழகத்திலிருந்து அவன் ஏன் அங்கு போனான்? எப்படிப் போக முடிந்தது? யார் அவனைப் போக அனுமதித்தது?' என்பனவற்றுக்கெல்லாம் விடை இங்குள்ள யாருக்குமே தெரியாதிருக்க முடியாது. ஆனால்,

ஆட்சிப் பலகையில் அமர்ந்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு வெறும் காட்சிப் பலகையில் உணர்வற்றவர்போல் வீழ்ந்து கிடப்போர் அவ்வகைச் செய்தியோ, அவற்றின் முன்னிலையோ தமக்குத் தெரியாது என்று நடிக்கலாம். அது விந்தையல்ல. ஏன்?

நீங்களும், நானும் சொல்கிறோம், நல்லுணர்வு உள்ளோர் எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள், இந்த நாடு வடவரின் பிடியிலே சிக்கிச் சீரழிந்து வாடுகின்றது என்று; தன் வளத்தை எல்லாம் கொள்ளைப் பொருளாக நாள்தோறும், நாள்தோறும் இழந்துகொண்டு கிடக்கின்றது என்று. இது ஊரறிந்த செய்தி; நாடறிந்த செய்தி; உலகம் அறிந்துகொண்டு வருகின்ற செய்தி; இன்னும் சில நாளில் உலகப் பேரவையாம் ஐ.நா. விற்கோர் கேள்விக்குறியாக எழப்போகின்ற செய்தி. இதனை என்றாவது அவர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்களா? இல்லை. ஏன்?

வடவராதிக்கத்திற்குக் கையாட்களாக, அன்னார் ஏவலை தாங்கள் பெற்ற பெரும்பேறு என்று மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கின்றார்கள் அவர்கள். அந்த மயக்கம், அவர்களை நடிக்கவிட்டு வேடிக்கை பார்க்கின்றது.

ஆகவே, அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே, அது விந்தையல்ல. அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமானால், மயக்கம் தெளியவேண்டும். மயக்கந் தெளியவேண்டுமானால்... (இங்கு மற்றொன்று விரித்தமைக்குப் பொறுத்தருளவேண்டும்)

அதோ நடுத்தெருவில், நள்ளிரவு வேளையில், வாட்டும் பெரும் பிணியினும் கொடிய பனிவதைத்துப் பிடுங்க, நிற்பதற்கோர் இடமின்றி, நடக்கவும் முடியாமல் தடுமாறித் தத்தளிக்கின்றானே அவன், தன் சொந்த நாட்டில் வாழ வகை இருக்க, வழி இருக்க, அவற்றை விட்டுவிட்டு வெளிநாடு ஏகியவன் என்றா நினைக்கின்றீர்கள்? அப்படி எண்ணத்தான் முடியுமா? சொந்த நாட்டிலும் அதே கதிதான். அதே துன்பந்தான். அதைத் துடைப்பதற்குத்தான் அவன் வேற்று நாட்டில் தஞ்சம் புகுந்தான். அவனுடைய நெஞ்சலுக்கும், கேவலுக்கும், கூப்பாட்டுக்கும், கதறலுக்கும் இங்கும் கிடைத்தவை வசவுகள்தாம். அங்கும் அவையே கிடைக்கின்றன. ஆனால் ஒரு மாறுதல். இங்கு அவனை 'வக்கற்றவனே வகையற்றவனே, துப்பில்லாதவனே, துராத்மாவே' என்று வசை பொழிந்தார்கள். அங்கு 'போடா தமிழா' என்று துரத்துவது ஒன்றே எல்லா வசவுகளின் பொருளையும் தருவதாக இருக்கின்றது. காரணம் வேற்று நாட்டில் வேட்டி கட்டிய தமிழனுக்குப் பேர் கள்ளத்தோணி. தமிழன் என்றால் பிச்சைக்காரன். தமிழன் என்றால் கூலி. ஒருவனை இப்போதெல்லாம் இழித்துப் பழித்துப் பேசவேண்டுமானால், அவனைத் 'தமிழன்' என்று கூறினால் போதும்—நம்மவர் போய் வாழும்,--உழைக்கும், பிச்சை எடுக்கும் வேற்று நாடுகளில்.

அதோ, அங்கு திக்கற்றுத் தடுமாறுகின்றானே, அவனுடைய முன்னோர்கள், அதாவது அவனுடைய பாட்டனின் பாட்டனும், அவருக்கு முற்பட்டோரும் தமிழகத்தில் குறுநில மன்னர்களாக வாழ்ந்தவர்களாம், ஆண்டவர்களாம். அது அவனுக்குத் தெரியாது. ஊரிலுள்ள பெரியவர்கள் அதுபற்றிச் சொல்வார்கள். 'தாமே உயர்ந்தோர். தாமே எல்லாரினும் மேம்பட்டோர்' என்ற வீண் செருக்குத்தான் அவர்களுடைய குடியை வீழ்த்தியது, தாழ்த்தியது என்று கூடப்பேசிக்கொள்கிறார்கள். அதுவும் அவனுக்குத் தெரியாது. 'அவனுடைய முன்னோரின் பழைய செருக்கு அவனிடமும் இருக்கின்றது; அந்தப் பெருமையான எண்ணத்தோடுதான் அவனும் உலவுகிறான்' என்று பேசுதல், இன்று அவனை எடுத்துக்கொண்டால் பொருந்துவதில்லை. காரணம், பெருமை என்றால் என்னவென்றே தெரியாது அவனுக்கு. செருக்கு என்ற உணர்வே அவன் உள்ளத்தில் எழுந்ததுகிடையாது. எழுதற்கு வழி இல்லை. என்றாலும், முன்னோர் செய்த 'தீவினை' அவனை வாட்டி வதைத்தெடுக்கின்றது என்று எடுத்துக்கொள்வோம். அதனை மாற்றுதற்கோர் நல்லமைப்பு எது என்று தேர்ந்துகொள்வோம்!

அதோ அவன் நகர்கிறான். நடக்க எண்ணி நகர்கிறான். இனி அங்கு இருக்கவோ, உலவவோ முடியாது. முடிந்தாலும் அதில் பயனேதும் இல்லை.

கடந்த மூன்று நாட்களும் அவன் பேரின்னல் பட்டுவிட்டான். அந்தப் பேரின்னல் அவன்பால் போதுமளவு பசியையும், தாகத்தையும், களைப்பையும் சோர்வையும் தந்துவிட்டது. வேண்டியமட்டும் சித்திரவதை செய்துவிட்டது. இனி அவன் உய்யமாட்டான். சாவு அவனைக் கூவி அழைக்கிறது — பட்டினிச் சாவு.

அதோ அவன் நடக்கிறான். ஆமாம், நகர்ந்தவன் நடக்கிறான். அவனுடைய ஊர்ப்பெரியவர்கள் சொன்ன பெருமையும், பீடும் இப்போதுதான் அவன் உள்ளத்துள் வந்து புகுந்துகொண்டன போலும்! அதோ அந்தப் பெருமையோடு வீம்போடுகூட அவனுடைய இறுதி மூச்சும் தூண்டுகின்றது. அவன் நடக்கிறான். தன் இறுதிக்கு அறுதி வருமுன் தமிழகத்தை அடைந்துவிடவேண்டுமென்று பீடுநடையோடு வேக நடையும் கூட்டி நடக்கிறான். "வாழத்தான் வழியளிக்கவில்லை என் சொந்த நாடாம் தமிழகம்! சாவதற்கேனும் அங்கோர் இடம் கிடைக்கட்டும்" என்று அவன் நடக்கின்றான் தன்நாடு நோக்கி.

★

தலைமை நிலைய அறிக்கை (அ) 11)66

தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், வ. ஆ' மாவட்டம், வேலூர் நகரில் 1961 சனவரித் திங்கள் 7, 8 (சனி, ஞாயிறு) நாட்களில் நடைபெறும்.

அறிவகம்', சென்னை-13
16—11—1960

கே. ஏ. மதியழகன்,
அமைப்புச் செயலாளர்.

இலக்கியக் கட்டுரை

நக்கீரனுக்கு இழுக்கு

—[மதியண்ணல்]—

இளஞாயிற்றின் எழுச்சியால் இருள் நீங்குகின்றது; உயிர்கள் எல்லாம் இன்புறுகின்றன. அதுபோல் பகுத்தறிவின் வளர்ச்சியால் மக்களின் மன இருள் நீங்குகின்றது. பொய்ம்மைக் கதைகளைப் புறக்கணித்துப் புத்துணர்ச்சி பெற்று வாழ முற்படுகின்றனர் மக்கள்.

நம்நாட்டின் பழைமை வரலாறு பெருமைக்குரியதாக இருக்கிறது; இடைக்கால வரலாறு இரங்கத்தக்கதாக இருக்கிறது. புதிதாக இனி எழும் வரலாறு பொலிவுதரலாம். இடைக்காலத்தில் எழுந்தபொய்ம்மைக்கதைகளை எல்லாம் மக்கள் இன்று வெறுக்கின்றனர். ஆனால் ஒரு புலவனைப் பற்றிய கதை மட்டும் இன்றும் பல பேச்சாளர்களால் மேடைதோறும் முழங்கப்படுவதைக் கேட்கிறோம். "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்ற நக்கீரனின் பரம்பரை நாம்—என்று முழக்கமிடுகின்றனர்.

இக்கதை, தமிழரின் வீர உணர்வை-துணிவு மனப்போக்கை-காட்ட எழுதப்பட்டதாகக் கருதுவது சரியன்று. சங்கத் தமிழ் பாடிய நக்கீரனின் பெருமைக்கு இக்கதை இழுக்கைத்தான் தேடித் தருகிறது — அது எப்படி என்று சிறிது காணலாம்.

புராணக்கதை எல்லார்க்கும் தெரிந்ததே. பாண்டியன் செண்பக மாறன் தன் தலைவியோடு சோலையிலே உலாவியகாலை, என்றும் நுகர்ந்தறியாப் புதுமணம் வீச உணர்ந்து, அது தன் தலைவியின் கூந்தலில் வீசிய மணமே என்று தெளிந்ததாகவும், ஆனால், அது அவளுக்கு இயற்கை மணமா செயற்கை மணமா என்று ஐயுற்றதாகவும்; உண்மை அறியவேண்டி, அரசவை மண்டபத்தில், அறிந்து கூறுவோர்க்குப் பரிசாகப் பொற்கிழி ஒன்று கட்டிவைத்ததாகவும், வறுமையில் வாடிய, 'இறைவனின் அன்பனான' தருமி என்பான் தன் வறுமை தீரச் சொக்கநாதரை வணங்கியதாகவும், உடனே பாவல்ல பரமன், பாடல் ஒன்று பாடித் தந்ததாகவும், அதை அவன் அரசவை கொண்டுவர, தலைமைப் புலவன் நக்கீரன், 'பாடல் பொருட்குற்ற முடைத்து' என்று சொல்ல, இறைவனே நேரில் வந்து நெற்றிக் கண்ணைக் காட்டிக் கேட்டதாகவும், அப்போதும் "குற்றம் குற்றமே" எனக் கூறியதாகவும் கதை உள்ளது.

கதையைக் கட்டிய புராணகாரருக்கு நக்கீரனைப் பெருமைப்படுத்த வேண்டும்—என்ற எண்ணமில்லை. பரமனின் புகழ்பாட வேண்டுவதே அக்கதைகாரரின் எண்ணம். நக்கீரன் இப்படிக் கேட்டதன்மூலம் குற்றம் செய்தான் என்பதே அக்கதைக்காரரின் எண்ணம் என்பதை, "நும் பாடல் குற்றம் குற்றமே என்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்" (திருவிளையாடல் புராணம்) என்று குறிப்பதால் விளங்கும்.

இறைவனின் பாடலாகத் தருமி கொண்டுவந்த பாடல்:

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ?
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே"

இப்பாடல் குறுந்தொகை என்ற நற்றமிழ் இலக்கியத் தொகைக்கண் உள்ளது. பாடியவரின் பெயர் இறையனார் என்று உள்ளது. புராணகாரரின் மயக்கமே இங்குதான் உள்ளது. இறையன் என்ற புலவன் பெயரை இறைவன் என்று கருதியதே அவர் மயக்கமாகும். இப்பாடலில் "இயற்கை மணம் உண்டு" என்று ஐயம் நீங்கச் செய்த அமைப்பும் இல்லை. தலைவியின் நலம் புனையும் உள்ளமே புலப்படுகிறது. கதை கற்பனையே என்பதற்கு டாக்டர் மு. வரதராசனார் கூறும் சில காரணங்களைக் காணலாம்.—

தமிழில் பாடல்களை அகம், புறம் என்று பிரித்து வழங்கப்படுகிறது. அகப்பாடல் என்பது முற்றிலும் காதல் வாழ்வைப்பற்றியதாகவும், வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ ஒருவரைச் சுட்டாததாகவும் இருத்தல் வேண்டும். இவ்வமைப்பில் சிறிதே மாறுபட்டாலும் அப்பாடல் புறப்பகுதியிற் சேர்க்கப்பட்டுவிடும். "நெடுநல்வாடை" என்பது ஒரு பழந்தமிழ் இலக்கியம். அது முற்றிலும் அகப்பாட்டாகத் திகழ்ந்தாலும், "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என்றவரி பாண்டியனின் வேப்பமாலையைக் குறிப்பதாகக் கருதப்பட்டுப் புறப்பாடலாக வழங்கப்படுகிறது. ஆகவே, ஒரு பாட்டை அகமா புறமா என்ற ஆய்வில் தமிழர் மிகவும் கவனமாக இருந்தமை தெளிவு.

குறுந்தொகை கி.பி. மூன்றாம் அல்லது கி. பி. நான்காம் நூற்றாண்டுகளில் தொகுக்கப்பட்டதாகலாம். தொகுத்தவர் ஒவ்வொரு பாட்டையும் அகமா புறமா என்று எடைபோட்டுப் பார்த்தே அகப்பகுதியில் சேர்த்திருப்பார். அவருக்குக் கிடைத்திருக்கும் குறிப்புகள், பாடியவர் இறையன் என்ற பெயருடைய புலவன் என்ற அளவில்தான். பாட்டிற்கு எழுதப்பட்டுள்ள கிளவிக் குறிப்பு "இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய் தொட்டுப் பயிறல் முதலாயின அவள் மாட்டு நிகழ்த்திக் கூடித், தன் அன்பு தோன்ற நலம் பாராட்டியது" என்றுதான் உள்ளது. பாண்டியன் மனைவியின் கூந்தல் ஆராய்ச்சிபற்றிய பாடலாயின் புறப்பகுதியில் சேர்த்திருக்க வேண்டுமல்லவா? கிளவிக் குறிப்பிலும் ஒரு சிறு சான்றுகூடப் பரமன் பாடியதாகக் காட்டவில்லையே.

மேற்படி பாடலைப் பல உரையாசிரியர்கள் தம் உரையில் மேற்கோளாகக் காட்டுவர். பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் தம் உரையில் எடுத்துக்காட்டுகின்றனர். நச்சினார்க்கினியர் நான்கு இடங்களில் அப்பாடலை எடுத்தாளுகிறார். இவர்கள் யாரும் இக்கதைபற்றி, இறைவன் பாடியது என்ற அளவில்கூடக் கூறாமல் தலைவியின் நலம் பாராட்டிய ஒரு புலவனின் பாட்டாகவே கொள்கின்றனர்.

இறையனார் களவியல் என்ற நூல் ஒன்று உள்ளது. இக்கள

வியல் உரை வகுத்த பிற்காலப் புலவர் இந்நூலை இறைவன் இயற்றியதாகக் கொள்கிறார். "தன்கண் நின்ற அன்பு வெளிப்படுத்துத் தலைமகளைப் புகழ்ந்து நயந்து உணர்த்திற்று" என்று இப்பாடலை எடுத்தாண்டு, குறிப்பிடுகிறார். இப்பாடல் இறைவன் பாட்டென இவர் எண்ணியிருந்தால் இறைவனின் களவியலுக்கு அவன் பாட்டே சான்று என்று கூறிப் பூரித்திருப்பார் அல்லவா?

ஆகவே, குறுந்தொகை நூல் தொகுத்தவரோ, தொல்காப்பிய உரையாசிரியர்களோ குறிப்பிடாத கதையைக் கூறுவதால் இக்கதை புராணகாரர்களின் கற்பனை என்கிறார் பேராசிரியர் மு. வரதராசனார். பரஞ்சோதி திருவிளையாடலில் இக்கதை விரித்துரைக்கப்படுகிறது.

கதை கற்பனை என்று கண்டோம். இக்கதையால் நக்கீரனுக்கு—தமிழ்ப்பெரும் புலவனுக்கு—என்ன இழுக்கு என்று காணலாம். நக்கீரன், பெண்ணின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை" என்று மறுத்ததாகக் கதை கூறுகிறது.

ஆனால், சங்கப் பாடல்களில் தலைவியின் உடலில் நறுநாற்றம் இருப்பதாகப பாடல்கள் உள்ளன. இன்றைய அறிவியலார் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர். பழங்காலத்திலேயே நம முன்னோர், புலன் உணர்வில் கூர்த்தராய் விளங்கியுள்ளனர். "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து" எனத் தொடங்கும் குறளில், உயிர்த்து என்பது மூக்கால் முகர்ந்து என்று பொருள்படும். இப்பாட்டு, தலைவியிடத்து ஐம்புல நுகர்வும் உள்ளதாகப் பாடியதாகும். 'முறிமேனி முத்தமுறுவல் வெறிநாற்றம் வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு" என்ற குறளிலும் தலைவி மேனியின் மணம் வெறிநாற்றம் என்று குறிக்கப்படக் காணலாம். தலைவியின் உடலில் உள்ள மணம் கூந்தலிலும் இருத்தல் இயல்பே. ஆகவே சங்ககாலப் புலவர்க்கு கூந்தலுக்கு மணமுண்டு என்ற கருத்து உடன்பாடே.

சங்கப்புலவன் நக்கீரன் மட்டும் இக் கருத்தில் மாறுபடக் கூடாதா என்று கேட்கலாம். அவனுடைய பாடல்களில் இதற்குச் சான்று உண்டா என்று வினவலாம். தலைவியின் நெற்றி மிக்க மணமுடையது என்று பாராட்டும் நக்கீரனின் பாடல்கள் உள.

"கடும்பரிப் புரவிக் கைவண்பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறும்
இவள் நுதலே" (அகம்-93)

நெற்றிக்கு மணமுண்டு என்று பாடியவன் கூந்தலுக்கு மட்டும் மணமில்லை என்று மறுத்திருப்பானா?

இவற்றையெல்லாம்விடக் கூந்தலுக்கு மணமுண்டு என்று பாடியதாக அவன் பாட்டில் கருத்து இருப்பின், கதை பொய்யே என்று புராண அன்பர்களும் ஏற்பர் அன்றோ? நக்கீரப் பெருந்தகை பாடிய பாட்டில் "நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தை" (அகம்-36) என்ற வரி உள்ளது. நறுமணமிக்க பலவாகிய கூந்தலையுடைய தொடியணிந்த பெண் என்ற கருத்துப் பெற இவ்வரி அமைந்துள்ளது. அவர் குறிப்பிடும் மணம் இயற்கை மணம் என்பதற்கு ஏது சான்று? நறும் பல் கூந்தல் என்பது மலர் முதலானவற்றால் ஆகிய செயற்கை மணம் எனல் ஆகாதோ என்று பக்தர்கள் மனம் பதறிக் கேட்கலாம்.

அக்கூந்தல் மணம் செயற்கை மணம் என்றால், தலைவி இயற்கை நலம் புனைவதற்காகக் கூறப்படுவது முரண்படும். மற்றுமொரு பெரும் சான்று உள்ளது.

"தகரம் நாறும் தண்ணறும் கதுப்பின்" (141—அகம்) எனபதும் நக்கீரனின் பாட்டில் உள்ளதேயாம். இயற்கை செயற்கை மணங்களைப் பிரித்துப் பேசுகிறான் புலவன் இவ்வரியில்; தகரம் நாறுதல் செயற்கை மணம்; தண்ணறும் தன்மை கதுப்பிற்கு (கூந்தல்) உரியதாம். தகரச் சாந்து மணக்கும் தண்ணிய மணமுடைய கூந்தல் என்ற கருத்து, ஏற்கனவே தண்ணறும் கதுப்பாகத் திகழ்வது, தகரமும் மணக்கும் தன்மை அடைவதாகக் கூறுகிறது. எனவே, நக்கீரன், கூந்தலுக்கு மணம் இயற்கையாக உண்டு என்று பாடியவன் என்பதற்கு அவன்பாடல்களில் சான்று உள்ளமை தெளிவு. நெற்றிக்கும் கூந்தலுக்கும் மணம் இயற்கையில் உண்டு என்று பாடியவனை—அவ்வாறு பாடும் சங்கப்புலவர் மரபைப் போற்றிய தமிழ்ச்சான்றோனை—பரமனை உயர்த்த வேண்டிப் பழித்தது உண்மையாகவே இழிவு படுத்துவது அல்லவா? சங்கப்புலவனுக்கு எவ்வளவு பெரிய இழுக்கை இப்பக்தர் இலகங்கள் தேடித் தந்துள்ளனர் என்பதை மேற்கூறிய சான்றுகள் மெய்ப்பிப்பனவாம்.

இனி, இறுதியாக ஒரு குறையும் கூறப்படலாம். பழைய புலவர்கள் ஒற்றுமையாக வாழவில்லை. அழுக்காறு கொண்டு அலமந்தனர். எனவேதான், கொண்டகருத்தாயினும் பொறாமையால் நக்கீரன் அக்கருத்தை ஏற்கமறுத்திருக்கலாம் என்று கூறப்படலாம்.

ஆனால், தெளிந்த சான்றோராய்—தேர்ந்த புலவராய்—விளங்கிய ஒரு புலவனை அவ்வாறு கருதுதல் பொருந்தாத ஒன்றாம். அரைகுறைப்புலவர் அவ்வாறு அழுக்காறு கொண்டிருந்திருக்கலாம். ஆனால் நக்கீரனோ தலைமைப் பாவலன்.

நக்கீரன், தன்னைப்போன்ற மற்றொரு புலவனின் உண்மைப் புகழைப் பாடத் தயங்காத நெஞ்சினன். "உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்" (அகம்—78) என்று தன்னையொத்த புலவனைப் பாடுகிறான்; புகழ்மொழி பகர்கிறான். ஆகவே, அழுக்காறு அவன நெஞ்சத்தில் இல்லை என்பது தெளிவாகும்.

எனவே, "நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று கேட்டுக் குற்றம் செய்தான் நக்கீரன் என்ற புராணக்கதை பொய்; நக்கீரனுக்கே இழிவுதரும் அக்கதையைப் புறக்கணித்தல் நம் கடன். இவ்வாறு தமிழ்ப் பண்பாட்டிற்கும், மரபிற்கும், தமிழ்ப் புலவர்க்கும் இழுக்கைத் தேடித் தரும் புராணகாரர்கள்—திருவிளையாடல் புராணம் தந்த பரஞ்சோதி போன்றோர் — நமக்கு இழுக்குச் செய்த குற்றவாளிகளாவர். ●

'திராவிடன்'

முகவரி மாற்றம்

திராவிடன் (சோமு அச்சகம்) கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. விற்பனையாளர்கள், சந்தாதாரர்கள், கழகத்தோழர்கள் — அனைவரும் புதிய முகவரிக்கே தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

'திராவிடன்'
163, வால்டாக்ஸ் ரோடு
சென்னை.

[தொலைபேசி எண் பின்னர் அறிவிக்கப்படும்]

நல்ல ஏற்பாடுதான்

ர் 19 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (18 12–60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 23

தொழிலாளர்களின் நலம்பேணும் நல்லெண்ணத்தோடு, சென்னை அரசு ஏற்படுத்த இருக்கும் ஒரு திட்டம் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது.

அதாவது. தொழிலாளர்கள், தங்கள் விடுமுறை நாட்களை நல்ல முறையில் பயன்படுத்த வழி அமைத்துத் தரும் முறையில், ஒரு விடுதியை (Holiday Home for workers) மாபலிபுரத்தில் புதிதாகக் கட்டப்போகிறதாம். இதற்காக ரூபா 64,300—00 ஒதுக்கப்பட்டுள்ளதாம். இதோடு, கட்டிடத்தின் பராமரிப்புச் செலவுக்காகவும் ரூபா 6000—00 ஒதுக்கியுள்ளதாம்.

ஏற்கெனவே, மாபலிபுரத்தில் சென்னை அரசால் ஒரு விடுதி அமைக்கப்பட்டுள்ளது. அது ஏழை மக்களுக்குச் சிறிதும் பயன்படா அமைப்பைக் கொண்டதாகும். அதாவது, குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட ஒரு விடுதியாகும். அந்த விடுதியில் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மட்டுமின்றி, இங்குள்ள வசதி படைத்தோரும் அதில் தங்கும் வாய்ப்பைப் பெறுகின்ற முறையில் அது அமைக்கப்பட்டுள்ளது.

இப்போது ஏழைத் தொழிலாளர்களுக்கென ஒரு விடுதியை அமைக்க முன்வந்துள்ளமை உண்மையிலேயே வரவேற்கக்கூடியதாகும்.

இல்லாமையின் கொடுமையால் உந்தப்பட்ட ஏழை மக்கள், தமக்கென ஒரு தொழில் கிட்டாதா என்று தேடியலைந்து, பெற்ற தொழிலை, இரவென்றும் பகலென்றும் பாராது செய்து முடித்து, அதன் பயனாகப் பெறும் சிறு ஊதியத்தை முதலாக வைத்துத் தங்கள் குடும்பக் கப்பலை எப்படியோ ஓட்டும் நிலை பெற்றவர்களுக்கு, அவர்கள் படும் துன்பங்களையும், கவலைகளையும் ஒருவாறு மறந்து சிறு பொழுதேனும் இன்பம் என்ற எட்டாப்பொருளைப் பெற்று மகிழும் வாய்ப்பினைச் சென்னை அரசின் இந்த ஏற்பாடு தருமாயின், இது உளமார வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

தொழிலாளர்கள் மிகுதியாக உள்ள பகுதிகளுக்கு அருகாமையில், மாபலிபுரம் போன்ற கடற்கரைப் பிரதேசங்களில் இப்படி "ஏழை விடுதிகள்" அமைவதை எல்லோருமே வரவேற்பர்.

ஆனால், "கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்டது" போல், அந்தக் கட்டிடங்கள் ஆகிவிடாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்வதைப் பொறுத்துத்தான், இந்த ஏற்பாட்டினால் ஏழைத் தொழிலாளர்கள் பயன் பெறுவரா, மாட்டாரா என்பதைக் கூற முடியும்.

ஏனென்றால், ஏழைகளுக்கென்று தனியாகச் செய்யப்படும் எந்த நல்ல ஏற்பாடும், அது, அந்த ஏழைகளை அண்டவிடாமல் பார்த்துக்கொள்ளும் 'நல்ல'வர்களும் சிலர் நாட்டில் இருக்கிறார்கள் அல்லவா!

எனவேதான், சர்க்கார் நல்லெண்ணத்தோடு செய்ய இருக்கும் இந்த ஏற்பாடு முழு வெற்றி பெற வேண்டுமென்பதில் உண்மையான அக்கறை காட்டும் நாம், சென்னை அரசின் இந்த ஏற்பாட்டை முழு மனதோடு வரவேற்கின்றோம்.

அதே சமயத்தில், ஏழைத் தொழிலாளர்கள்— 40, 50-கல் தொலைவில் இருந்து வருபவர்களுக்கு ஏற்படும் பிரயாணச் செலவில் சலுகை கிடைக்கும்படி அரசு செய்யவேண்டும் என்ற யோசனையையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

அதுமட்டும் போதுமா? அமைக்கப்பட இருக்கும் தொழிலாளர் விடுதியில், உணவு வசதியும் தங்கும் ஏற்பாடும், விளையாட்டுக்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று தெரிகிறது.

விடுதியில் தரப்படும் உணவுக்குரிய கட்டணம், தங்கும் அறைக்குரிய வாடகை ஆகிய இவைகளில் கையாளப்படும் தாராளத் தன்மைதான், உண்மையிலேயே தொழிலாளர்களின் போற்றுதலையும் பாராட்டுதலையும் பெற்றுத்தந்து, அரசின் இந்த ஏற்பாட்டுக்குப் பெருமையுண்டாக்கும்.

வெளிநாடுகளில், தொழிலாளர்களுக்கென இது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அவர்கள் அடைந்துவரும் நன்மைகளை நாம் நன்கு அறிவோம். எனவேதான், இங்கும் அந்த நல்ல முறை மலர வேண்டுமென்று விரும்பிச், சென்னை அரசின் இந்த ஏற்பாட்டை வரவேற்கின்றோம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுங்க; நான் பார்த்துக்கொள்கிறேன், மற்றதை எல்லாம் என்று நாலு நாளாகப் போய்க் கேட்டுப் பார்க்கிறேன், உம்னு சொன்னுத்தானே...''

''இளித்துக்கொண்டே இடப்பான்; அவன் வாடிக்கை அது.''

'இளிக்கவுமில்லை; முகத்தைச் சுளிக்கவுமில்லை. நான் பேசப் பேச, புன்சிரிப்பாவே இருக்கிருரு, உங்க தம்பி!''

''கிடக்கருன், விட்டுத்தள்ளு. அவன் அப்படி இருக்கிருன் என்பது தெரிந்த பிறகும், நீ ஏன் பட்டு, மறுபடியும் மறுபடியும் அவனிடம் போய்ப் பேசிண்டிருக்கறே......''

''அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்! என் தம்பி, என்ன, அம்மியைவிடவா, கேவலமானவன்......''

''இன்றுதான், பாதிச் சம்மதம் தெரிவித்தார்...''

''பார்த்திங்களா! பட்டு கெட்டிக்காரியாச்சே......சம்மதத்தை வாங்கிக்கொண்டுதான் வந்திருக்கா';

''ஆமாம்......அந்த வழக்கிலே என்ன, பிரமாதமான விசித்திரம் இருக்குது. அடிதடிச் சண்டைதானே. கலகம் குழப்பம், தானே......''

''பட்டு சொல்கிறபடி, அது, சாதாரண, அடிதடி சண்டை வழக்கா இருக்காது......''

''வழக்கு நடக்கும்பொது, நீங்களே ஆச்சரியப்படப் போறிங்க, பாருங்களேன்! புதுப்புதுச் சட்ட நுணுக்கமெல்லாம், வெளிவரப் போகுது.''

''ஆமாம்! நான் பாதியிலேயே நிறுத்திவிட்டேனே, செயற்கை மழை சம்பந்தமான, வழக்கு. செயற்கை மழைக்காக, மேகங்களை விரட்டுவது. சட்டப்படி என்ன குற்றம்?......''

''அதிலே என்ன குற்றம்''

''அதிலே என்ன குற்றம் இருக்க முடியும்! யார், குற்றம் என்று சொல்லி வழக்குப் போட முடியும்!''

''போடமுடியும்! இப்ப, ஒரு நாட்டுச் சர்க்கார், தன் நாட்டிலே, மழை பெய்யணும் என்பதற்காக, மேகக் கூட்டத்தை, மடக்கி, குளிரச் செய்யும் வேலையிலே ஈடுபடுவதாக, வைத்துக்கொள்ளுங்க. அந்த மேகக் கூட்டம், எந்த நாட்டுப் பக்கமாகப் போகிறதோ அந்த நாட்டுக்காரர், வழக்குப் போடலாம்! என் நாட்டுப் பக்கம் வந்துகொண்டிருந்தது மேகக்கூட்டம். என் நாட்டிலேதான் மழையாகப் பொழிந்திருக்கும். நாடு வளமாகி இருக்கும்! விளைச்சல் நிரம்ப இருந்திருக்கும்! அதைக் கெடுக்கிற முறையிலே, எங்கள் நாட்டுப் பக்கம் வந்துகொண்டிருந்த மேகக் கூட்டத்தைத் தடுத்து, நிறுத்தி, தன் நாட்டுக்கு மழை கிடைக்கும்படி செய்துகொண்டது, என் நாட்டுச் சொத்தை வழிப்பறி நடத்தி எடுத்துக்கொண்டதுபோலக்குற்றம் என்று, அந்த நாடு வழக்குப் போடலாம்......''

''பலே! பலே! பொன்னி சொல்வது, பொருத்தமானது. சிக்கலான சட்டப்பிரச்சினை இருக்கிறது, அந்த வழக்கில்...''

''நீங்க ரெண்டுபேரும், குதிக்கிறது பார்த்தா, எனக்குச் சிரிபபுத்தான் வருகிறது. மேகத்தை, வழியிலே மறித்து எடுத்துக்கொண்டதாக, எவனுவது வழக்குப்போடுவானு...''

''ஏன் போடக்கூடாது! போன மாதம், உலகமே அதிசயப்படுகிற விதமாக ஒரு புத்தகத்தைப்பற்றிய வழக்கு நடந்தது, தெரியுமா?''

''புத்தகக் கடையிலே புகுந்து எவனுவது, திருடிவிட்டானு புத்தகம்?''

''இல்லே! ஒரு பிரபல எழுத்தாளர், ஒரு புத்தகம் எழுதினுர், அந்தப் புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிற விஷயம். ஆபாசமானது, அருவருக்கத்தக்கது, ஒழுக்க உணர்ச்சியைக் கெடுக்கக் கூடியது, என்று சொல்லிப், புத்தகத்துக்குத் தடைவிதித்தது, சர்க்கார். தடை செல்லாது என்று புத்தகம் வெளியிட்ட பதிப்பகத்தார், வழக்குப்போட்டார்கள்...''

''அது என்ன புத்தகம், பொன்னி! வழக்குப்போட வேண்டிய நிலைமை ஏற்படுத்திவிட்ட புத்தகம்!''

''கதைதான்! ஆமு, அதிலே, ஒரு சீமான் மனைவி தன கணவனிடம் இல்லற இன்பம் பெறமுடியாததால், மாளிகைத் தோட்டக்காரனுடன் கள்ளத்தனமான நட்பு வைத்துக்கொண்டதாக, ஒரு கதை''

''எழுதத் தோணுதே, இப்படி ஒரு கதை! ஏண்டி பொன்னி! எது எது ஆபாசமோ, அதைத்தான் எழுதணுமா? மறைக்கவேண்டியதை மறைக்கவேண்டாமா...... கொஞ்சமாவது, பண்பு உள்ளவர்கள், படிப்பார்களோ, அப்படிப்பட்ட புத்தகத்தை. என்னைக் கேட்டா, அந்தப் புத்தகத்துக்குத் தடைபோட்டது மட்டும் போதாது; அதை எழுதின ஆசாமி, இனி என்றென்றும், எதையும் எழுதக் கூடாது என்றே தடைபோட்டிருக்கணும்னுதான் சொல்லுவேன்...''

முத்துவேல் பதிப்பகத்தாரின் முத்தனைய
பொங்கல் வாழ்த்துக்கள்!

தாஜ்மகாலில் அண்ணு,
நாவலர்—கலைஞர்,
அண்ணு—சம்பத்,

ஆகியோரின் மூவண்ண படங்கள் உள்ள எழில்மிகு பொங்கல் வாழ்த்துக்கள்—உயர்ந்த வெளிநாட்டு ஆர்ட்பேப்பரில் அச்சிட்டவை—குறைந்த விலையில் கிடைக்கும்!

கவர் உள்பட	100-க்கு ரூ. 7—50
கவர் இல்லாமல்	100-க்கு ரூ. 6—50

தேவைப்படுவோர் 30% முன்பணத்துடன் ஆர்டர் செய்ய வேண்டுகின்றோம்.

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை, திருச்சி-8.

பொங்கல் மலர்

சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1—50 ஆகும். முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் பதிவுத் தபால் அனுப்பப்படும்.

பொறுப்பாளர்.

"நீங்க அப்படித்தான் சொல்லுவிங்க, ஏனென்றால் உங்களுக்கு, உங்களுடைய சொந்த விருப்பு வெறுப்பு மட்டும் தானே முக்கியம். அட்டடித்தானே, நீங்கள் சொல்வீர்கள். ஆமு, பட்டு! உனக்குத் தெரிந்திருக்கணுமே, அந்த வழக்கு சாட்டர்லி சீமாட்டியின் லீலைகள் என்ற புத்தகம் பற்றியது..."

"ஓ! தெரியுமே! வழக்கு விவரம் முழுவதும், படித்தேனே, பத்திரிகையில்..."

"நம்ம பத்திரிகைகளிலேயா, இந்த வழக்கைப்பற்றி வெளிவந்திருந்தது. நான் கவனிக்கவே இல்லை!"

"கவனித்து இருக்கமாட்டீங்க. பலபேர் அப்படித்தான்! கோயமுத்தூர் கள்ளநோட்டு வழக்கை மட்டும், பார்த்திருப்பீங்க."

"ஆமாமாம்! அந்த வழக்கு விசாரணை மட்டும், முழுவதும் படித்து முடித்து விட்டுத்தான்; வேறு பக்கத்தையே, திருப்புவேன்."

"இந்தப்புத்தகவழக்கிலேஎன்ன நடந்தது தெரியுமோ? புத்தகத்திலே உள்ளபடி ஆபாசம், அருவருக்கத்தக்கது, ஒழுக்கத்தைக் கெடுக்கக்கூடியது இருக்கிறதா, பாருங்கள் என்று, நீதிபதி, ஜூரர்களிடம் புத்தகத்தைக் கொடுத்தார். அவர்கள், உள் அறைக்குப் போய், முழுவதும், படித்துப்பார்த்தார்கள்."

"இது எல்லாவற்றையும்விட வேடிக்கையாக இருக்குது பொன்னி! எந்தப் புத்தகத்துக்குத் தடையோ, அதையே படிக்கக் கொடுத்தாளோ!! சரி! படித்துவிட்டு..."

"தடை விதிக்கக்கூடியபடி, ஆபாசம் இருப்பதாகத் தெரியவில்லை என்று ஜூரர்கள் சொன்னார்கள். தடை நீக்கப்பட்டுவிட்டது."

"புத்தகம் விற்கிறாளா...?"

"நம்ம நாட்டிலே கிடையாது. இங்கே விற்கக்கூடாதுன்னு சொல்லிவிட்டோ, மற்ற நாடுகளிலே தடை இல்லை."

"மற்ற நாடுகளிலே, புத்தகத்துக்கு மட்டுமா, அதிலே வருகிற மாட்டுகளுடைய லீலைகளுக்குக் கூடத் தடை இல்லாமல் இருக்கலாம். நம்ம நாட்டுக்கு வேண்டாம்டி பொன்னி! அப்படிப்பட்ட, ஆபாசக் களஞ்சியம்!!"

"ஆமாமாம்! நம்ம நாட்டுக்கு சாட்டர்லி சீமாட்டியின் காதலர்கள் என்பது போன்ற ஆபாசக் களஞ்சியம் தேவையே இல்லை. பாரதம் ஒண்ணு போதாதா, நம்ம நாட்டுக்கு......"

"நாக்கை இழுத்து, அறுத்துப் போட்டுவிடுவாடி பொன்னி! இப்படி வெளியே பேசினா......பாரதம் உனக்கு ஆபாசக் களஞ்சியமா இருக்கலாம், ஏனென்றால், நீ பெரிய மேதாவி! கோடி கோடியான மக்களுக்கு அது புண்ணிய கதைடி, பொன்னி! புண்ணிய கதை!"

"ஐயோ! இருக்கட்டுமே; யார் வேண்டாம்னு சொன்னது. சாட்டர்லி சீமாட்டி கதையிலே ஆபாசமான விஷயம் இருக்கப்படாதுன்னு சொல்றீங்க; கண்டிப்பாக! பாரதம், கடவுள் சம்பந்தப்பட்ட கதை! போகிற கதிக்கு நல்லது தேடித்தருகிற புண்ணிய கதை. அதிலே வருகிற துரௌபதைக்கு, ஐந்து பேர் கணவன்மார்......"

"பார்! பார்! பட்டு! பொன்னியோட வாயாடித்தனத்தைப் பார்!"

"பாரதத்திலே இருப்பதைத் தானே அவங்க சொல்றாங்க..."

"அவங்களா, அவங்க......தெரியும்டி, பட்டு! பொன்னிக்கு, நீ தருகிற புதிய மரியாதைக்கான காரணம். புரியுது. பூனை கண்ணை மூடிக்கொண்டா பூலோகமே இருண்டு போய்விட்டதாக எண்ணிக்கொள்ளுமாம். அதுபோல, நீ செய்துகொண்டிருக்கிற காரியம், யாருக்கும் தெரியாது என்று எண்ணிக்கொண்டாயா?"......

"என்ன சொல்றீங்க......புரியற மாதிரியாச் சொல்லுங்க......"

"என்ன சொல்கிறேன், என்று கேட்கிறியா! சொல்லணுமா!! வக்கீல்கள், ஏண்டி, வழக்கைத் தேடிக்கொண்டு போகணும், நான்தான் கேட்கறேன், சொல்லு, பார்ப்போம், அவனுக்கு வழக்குப்போட வேணும்னு, அவசியம் ஏற்பட்டா, வக்கீலைத் தேடிக்கொண்டு, அவன் போகிறான். உனக்கு என்னடிம்மா, அவ்வளவு அக்கரை, வழக்குப் போடு! நான் நடத்திக் கொடுக்கறேன் என்று, ஒருவார காலமாக, அவனை வட்டமிட்டுக்கொண்டிருக்கவேண்டிய அவசியம்?"

"அடே அப்பா! இதைத்தான் பெரிய குற்றமாக்கிக் காட்டுகிறீங்களா! இப்படித்தான், ஒரு ஆள், பதைக்கப் பதைக்க ஓடினானாம் போலீசுக்கு ஒருநாள்; என்ன? என்ன? என்று கேட்டார்களாம்! விடியற்காலை ஐந்து மணிக்கு பக்கத்துத் தோட்டத்திலே கொலை நடக்கப்போகுது; கொலையைப் பத்தி, பாவிகள் பேசிக்கொண்டிருந்ததை, நானே காதால் கேட்டேன் என்றானாம். போலீஸ், அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஏகப்பட்ட முன்னேற்பாடுகளெல்லாம் செய்துபார்த்தால், தோட்டத்திலே, வாழைக் குலையை வெட்டினானாம் ஒருவன! கொலை என்பதற்கும குலை என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் ஒருவன் குளறினான்; அதைக்கேட்டு ஏமாந்ததாம் போலீஸ்......"

"பரவாயில்லையே! போலீஸ் அவ்வளவு சுறு சுறுப்பாக இருந்தால் நல்லதாயிற்றே. காஞ்சிபுரத்திலே, நான்கு மாதங்களாகத் தொடர்ந்து திருடுகள், துணிச்சலான முறையிலே நடந்துகொண்டே இருக்கிறதாம்; இதுவரையிலே 30 இடங்களில் திருடு நடந்திருக்கிறது. ஒரு துப்பும் கிடைக்கவில்லை; திருடன் பிடிபடவே இல்லை."

"நாய் வரவில்லையா......?"

"வந்ததாம்... வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்துக்கொள்கிறதாம். விவரமாக காஞ்சீபுரத்திலிருந்து பட்டுச்சேலை விற்கவந்த வியாபாரி சொன்னார்."

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"அனியாயமாகத்தான்டி இருக்கிறது பொன்னி! போலீசுக்கு மந்திரி, பக்தவத்சலம் என்கிறார்களே! அனுபவசாலியாமே..."

"அனுபவசாலிதான்! ஆனால் எதிலே? எப்படிப்பட்ட மந்திரி சபை அமைக்கப்பட்டாலும், அதிலே தனக்கு ஒரு இடம் தேடிக்கொள்வதிலே...!!"

"போதும்டி, கேலி! அவர் இந்தத் திருடுவிஷயமாகக் கூட்வா, திறமையாக வேலைசெய்து, கண்டுபிடிக்க முடியாதவராக இருப்பார்......"

"அவர், தன் திறமையை, எதெதற்கு என்று செலவிடமுடியும்! போலீஸ் அவரிடம்! உணவு விஷயம் அவரிடம்! கோயில்கள் அவரிடம்! இதிலே, எதற்கு அவருடைய திறமையைச் செலவிடுவது? எப்படிப் பங்குபோடுவது! அது சரி! என்ன பட்டு, ஒருமாதிரியாக இருக்கிறாளே! ஏன் பட்டு! வலிக்கிறதா, என்ன?"

"பட்டு! நான் வேடிக்கையாகப் பேசினதிலே, கோபித்துக்கொண்டாயா, என்ன!"

"பட்டு! பட்டு! என்னடியம்மா! என்ன இப்படி, அசையாமல் உட்கார்ந்துவிட்டயே..."

"என்னடிம்மா இவளுக்குஇப்படி மிரட்சியா இருக்கு. பட்டு! பட்டு!"

"ஒண்ணுமில்லே! பயப்படாதிங்க! திடீர்னு, மயக்கம்போல இருந்தது. இப்ப, சரியாகிவிட்டது."

"மயக்கம்போல இருந்ததா! ஏன்? இதற்குமுன்னே இருந்ததில்லையே இதுபோல! சோடா, சாப்பிடறியாம்மா, பட்டு! சோடா!"

"சோடா எதுக்கு! இப்ப சரியாகிவிட்டது."

"பொன்னி! அவ அப்படித்தான் சொல்லுவா! நீ, இப்பவே அழைச்சிண்டு போய், மணியிடம் காட்டு. ஏதாவது உடனடியா, மருந்து கொடுக்கட்டும்."

"வா, பட்டு!"

"போடி கண்ணு! போய், டாக்டரிடம் காட்டு."

★ பொங்கல் மலர்

திராவிட நாடு

விலை ரூபா 1-50

★

இவ்வாண்டுப் பொங்கல் மலர் மிகச் சிறந்த முறையில் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் மலரின் எண்ணிக்கை விபரத்தை முன்னதாகவே (25-12-60-க்குள்) தெரிவிப்பதுடன், மலர் ஒன்றுக்குக், கழிவு நீக்கி ரூபா 1-15 வீதம், 28-12-60-க்குள் அனுப்பிவைக்கவும்.

—பொறுப்பாளர்.

குறிப்பு:—பழைய பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு மலர் அனுப்பப்படமாட்டாது.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில் ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.